பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா நிர்ரஹீம்.

# ரத்துல் காதியானி.

ஈரோடு

**சா. இ. முஹம்மது மூஸா**

அவர்களாலியற்றப் பெற்று,

ஈரோடு டைமண்ட் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

(Published by S. E. Mahammhad Moosa.)

ஹிஜ்ரி 1344 ஈஸவி 1925

(முதல் பதிப்பு)

] [விலை அணா 0-8-0.

QT:417
N25
180893

786

# முகவுரை.

எனதன்பார்ந்த முஸ்லிம் சகோதர, சகோதரிகாள்! அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபர்காதுஹு — நந்தென்னாட்டு முஸ்லிம்களுக்கு அவசியமான சில முக்கிய நூல்களை தமிழ்பாஷையிலெழுதி வெளியிடவேண்டுமென்ற எண்ணமானது என் மனதிலிருந்து கொண்டேயிருந்தது. ஆனால், தற்பொழுது நமது தென்னாட்டிலும், கொளும்பு, சிலோன்முதலிய இடங்களில் காதியானி மதஸ்தர்தம் மதத்தைப்பரத்தபகீரதப்பிரயத்தனங்கள் செய்து வருவதையறிந்துமுஸ்லிம் சகோதரர்கள் அன்னாரின் மாயவலையிலகப்பட்டு ஈமானைப் போக்கிக் கொள்ளாமலிருக்கும் பொருட்டுமிர்ஸாயிகளின் கொள்கைகளுக்கு தக்கமறுப்பெழுதி வெளியிட வேண்டியது அவசியமாய் விட்டபடியால் "ரத்துல் காதியாணி" யென்னும் இச்சிறிய நூலை யெழுத வேண்டியதாயிற்று. லாஹூர் மிர்ஸாயிபார்ட்டியினருள் பிரபல்யமான மவ்லவி முஹம்மது அலி M. A. L. L. B. அவர்கள் தமது மிர்ஸாயி கொள்கையை "The call of Islam" யென்னும் ஆங்கில நூலும் அதையே உர்துபாஷையில் "தஅவதே அம" லென்னும் பெயரால் ஓர் நூலும் யெழுதி வெளியிட்டிருக்கிறார். எனது இந்நூலானது அலி ஸாஹிபின் "தஅவதே அம" லென்னும் உர்து நூலுக்கு மறுப்பாகும். ஆதலின் முஸ்லிம் சகோதரர்கள் மிர்ஸாயிக

ளின் பிரசாரத்தில் மயங்கி ஈமானைப் போக்கிக் கொள்ளாமலிருக்கும் பொருட்டு இந்நூலை வாங்கிப் பார்வையிட்டு ஈமானைக் காப்பாற்றிக் கொள்ளும்படியாய்; முஸ்லிம்களின் சமுகத்தில் சமர்ப்பிக்கின்றேன். இச்சிறிய நூலை ஆதரித்து வேறு அவசியமான நூல்களையெழுதி வெளியிட மிஸ்கீனுக்கு ஊக்கத்தைக்கொடுக்கவேண்டியது தென்னாட்டு முஸ்லிம்களின் கடமையாகும். தமிழில் தக்க பாண்டித்தியமுடையவர்களும் தமிழை தாய்ப்பாஷையாகக்கொண்டவர்களும் இனிய தமிழாக எழுதுவதைப்போல் சொற்சுவை, நடையலங்காரம் இவைகள் அமையப்பெற்றதாக இந்நூலிராது. இஃதன்றி ஆங்காங்கு இலக்கண, இலக்கிய பிழைகள் காணப்படும். ஆகையால், சகோதரர்கள் அவற்றைப்பாராட்டாமல் கருத்தை மட்டும் உணரும்படியாய் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன். காதியானிகளிலெவரேனும், இதற்கு மறுப்பெழுத முன்வருவார்களாயின் இன்ஷா அல்லா அன்னாருக்கு உண்மையையுணர்த்துவேன் அவசியம் நேரிடின் அனுபந்தமாகவும் எழுதி வெளியிடுவேன். தவிர, இம்மிஸ்கீனுடைய ஹக்கில் துஆ செய்யும்படியாய் எனது முஸ்லிம் சகோதரர்களிடம் பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

வஸ்ஸலாம்.

ஈரோடு;
16-11-1925.

இஸ்லாமிய ஊழியன்,
**சா. இ. முஹம்மது மூஸா.**

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா நிர்ரஹீம்.

## ஹம்து.

எல்லாப் புகழும் புகழ்ச்சியும் ஸர்வ ஆலங்களையும் படைத்தி ரட்சிக்கும்படியானவனும், மானிட வர்க்கத்தினரை மேலான சிருஷ்டியாக சிருஷ்டித்தவனும், வம்பர்களையும், வழி கேடர்களையும் அடக்கியாளுமிராஜாதிராஜனும் அக்ஞானத்தில் மூழ்கிக் கிடந்த உலக மக்களை சீர்திருத்தி நேரான வழியைக் காண்பிக்கவும், ஏகத்துவம், சமத்துவம், சகோதரத்துவ முதலிய உயரிய கொள்கைகளைப் போதித்து அதன்படி நடப்பவர்களுக்குச் சுவர்க்கத்தைக், கொண்டு சந்தோஷத்தைப் புகட்டவும், விரோதமாய் நடப்பவர்களுக்கு நரகத்தைக் கொண்டு அச்சமூட்டியறிவிக்கவும். நபிமார்களுக்கெல்லாம் முந்தினவராக இருக்கச் செய்து, பின், எல்லா நபிமார்களுக்கும் கடைசியானவராகவும், எமது நபிகள் பெருமான் கா(த்)தமன் நபிய்யீன் ஹபீபே ரப்பில் ஆலமீன் ஸர்வரேகாயினத் முஹம்மது முஸ்தபா ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வசல்லமவர்களை அனுப்பினவனும் எமது நபி பெருமானுக்குப் பின், நபியும், வஹீயும்,

இல்லாமலாக்கியவனும், இல்ஹாம், ஷைத்தானிஞலும் உண்டாகின்றதென்று குர்ஆன் ஷரீபில் பஹிரங்கமாய் எச்சரிக்கைச் செய்தவனும், இன்னும் அதே எமது மாசற்ற திருக்குர் ஆனில் ஹஜ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸாம் அவர்களை மரணிக்கச் செய்யாமல் உயிருடன் பஞ்சபூத சரீரத்துடன் வானுலகிற்குயர்த்திக் கொண்டதாய் வெகுத்தெளிவாய் அறிவித்துள்ளவனும், கியாமத்திற்குச் சமீபத்தில் அவரை எமது நபிபெருமான் (ஸல்) அவர்களைப் பின்பற்றி நடக்கச் செய்ய வானலோகத்திலிருந்து இப்பிரபஞ்சத்தின் கண்ணிறக்குப்பவனும், இன்னும் மஹ்தி அலைஹிஸ்ஸலாம் அவர்களை கடைசி காலத்தில் இப்பூதலத்தில் அனுப்புகிறவனுமாகிய ஸர்வசக்தியுடைய அல்லாஹுத்த ஆலா ஒருவனுக்கே தகும்.

## ஸலவாத்து.

ஸலவாத்தும், ஸலாமும் உலகமக்களுக்கு மெஞ்ஞானத்தைப் போதித்து நேர்வழி காண்பித்தவரும், தன்னைப் பின்பற்றி வரும் உம்மத்துகளை கியாம நாளையில் இறைவனிடம் மன்றாடி ஷபா அத்துச்செய்து நற்பதவியடையச் செய்பவரும், தனக்குப் பின்னுல் பல தஜ்ஜால்கள் கிளம்பி உலகமக்களை வழி கெடுப்பார்களென்றும் நூதனப் பொருளும், வியாக்கியானங்களும் செய்து தம் வசப்படுத்த முயலுவார்களென்றும், நபிப்பட்டத்தின் தாவாச் செய்வார்களென்றும், ஹஜ்ரத் ஈஸா அலைஹிஸ்லாமவர்கள் மரணமடையவில்லை யென்றும் வானுலகிலிருந்து கடைசி காலத்திலிறங்கி வருவார்களென்றும், இன்னும் "எனக்குப்பின் எனது (முஹம்மது ஸல்) உம்மத்தில் பிரதிநிதியாயிருப்பார்" ரென்றும் திருவாய் மலர்ந்தருளியவருமான மெய்யறிவிப்

பாளரும் ஈருலக அதிபதியுமான மெஞ்ஞான சொரூபி ஹஜ்ரத் ரஸூலேகரீம் முஹம்மது முஸ்தபா ஸல்லல் லாஹூ அலைஹிவசல்லமவர்கள் பேரிலும், அவர்களின் கிளையார்கள், தோழர்கள் பேரிலும் உண்டாவதாக.

## வஹீ

லாஹூர் மவ்லவி முஹம்மதலி M. A. L. L. B. அவர்கள் தமது "தஅவதே-அமல்" என்னும் உர்து புஸ்தகத்தின 6-வது பக்கத்தில் "முன் அன்பியாக்க ளல்லாதவர்களுக்கு எவ்வாறு இறைவனின் வஹீ வந்து கொண்டிருந்ததோ அதாவது ஹஸ் ரத்மரியம் (அலை) ஹஸ்ரத் ஈஸா அலை ஹிஸ்ஸலாம் அவர்களின் ஹவாரிய்யூன்களுக்கும் இன்னும் ஹஸ் ரத் மூஸா (அலை) அவர்களின் தாயாருக்கும் வஹீ வந்த விஷயம் குர்ஆன்ஷரீபிலிருப்பதைப்போல் அல் லாஹூத்த அலாவுடன் பேசும் பாக்கியம் இந்த நபி கரீம் (முஹம்மது ஸல்லல்லாஹூ அலை ஹிவஸல்லம்) அவர்களின் உம்மத்தியிலும் ஜாரியாகயிருக்கவேண் டும்." என்று கூறியுள்ளார்.

முஹம்மதலி சாஹிபு நபிமார்களுக்கு வந்த வஹீயைப்போல் எமது நபிகள் பெருமான் முஹம் மது (ஸல்) அவர்களின் உம்மத்துகளுக்கும் இறைவ னிடமிருந்து வஹீவருமென்று கூறுகிறார். இவரின் கூற்றிற்கு குர்ஆன் ஹதீஸூகளிரண்டிலும் யாதொரு ஆதாரம் கிடையாது. உலகமக்கள் தன் குருவாகிய மிர்சாகுலாம் அஹ்மது காதியானி அவர் களைப் பின்பற்றவேண்டுமெனக் கருதியும், அவருக்கு

வஹீவந்து கொண்டிருந்ததாக நம்பிக்கொண்டு உண்மையை உணராமல் கூறுகிறார். வஹீ என்பதென்ன? வஹீவரவேண்டிய அவசியமென்ன? வஹீ எவருக்குவரும்? என்பனவற்றை உணர்ந்திருப்பாராயின் மேற்கூறியவாறு எழுதியிருக்கமாட்டார். இப்பிரபஞ்சத்தின் கண் இறைவன் "அவ்வப்போது" அவ்வக்காலங்களிலுள்ள மக்களை ஏகத்துவம், சமத்துவமும், சகோதரத்வ முதலிய உரிய கொள்கைகளைப் போதித்து சீர்திருத்தி நேர் வழிக்குக் கொண்டுவருவதற்காக தன் தூதர்(ரஸூல்) களை அனுப்பி வந்துள்ளான். அவ்வாறு அனுப்பிவந்த தன் தூதர்களுக்கு கட்டளைகளை 'வஹீயின் மூலமாக அனுப்பிக்கொண்டு வந்திருக்கிறான். முன்னுண்டான நபிமார்களுக்கு வஹீவந்து கொண்டிருந்ததைப்போலவே எமது உலக ரட்சகர் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களுக்கும் உலக மக்களை நேரான வழியில் சீராக நடத்துவதற்காக இறைவன் வஹீயை இறக்கிவந்துள்ளான்.

(நபியே) சொல்வீராக! என்னுடைய இறைவனின் மூலியமாய் எனக்கு வஹீயறிவிக்கப் படுவதைப் பின்பற்றி நடந்து வருகிறேன். இஃது (வஹீயின் மூலியமாயிறக்கப்பட்ட குர் ஆன்) உங்கள் இறைவனினின்றும், அத்தாக்ஷியாகவும் ஈமான் கோண்டவர்களுக்கு வழி காட்டக்கூடியதாயும்,கிருபையாகவுமிருக்கிறது. (குர் ஆன்ஸூரே அஅராப்.)

இவ்வாயத்தினால் நபிமார்களுக்கு வரும்படியான "வஹீ" யானது உலகமக்களை நேரான வழியில் சீராக நடத்துவதற்கென்பது நன்கு புலப்படும். "வஹீ" ஜிப்ரயீல் (அலை) அவர்கள் மூலியமாய் வந்து கொண்டிருந்ததென்பதை முஸ்லிம் சகோதரர்கள் நன்கறிந்த விஷயமாகும். மேலேகூற

ப்பட்டுள்ள விஷயங்களினால் வஹீயானது நபிமார்களுக்கே அவசியமும், சொந்தமென்றும், உம்மத்துகளுக்கு வஹீ வர வேண்டிய அவசியமில்லையென்றும், நபிக்கு வரும் வஹீயைப் பின்பற்றி அவசியம் நடக்கக் கடமைப் பட்டுள்ளார்களென்பது, நன்கு அறிந்து கொள்ளலாம். "(முஹம்மது-ஸல்-மே) சொல்வீராக! நான் உங்களைப்போல் ஓர் மனிதனே, (ஆனால்) எனக்கு இறைவனிடமிருந்து வஹீ வருகிறது" (குர்ஆன் ஸூரேகஹப்) முஸ்லிம் சகோதரர்காள! இறைவனின் இத்திருவசனத்தைச் சற்றூன்றி கவனிப்பீர்களாக. இதிலிருந்து வஹீயானது நபிமார்களுக குச்சொந்தமான தென்றும், அதன்படி நபிகள் பிரான் (ஸல்) அவர்களுக்கு வஹீ வந்துக் கொண்டிருந்ததென்றும், லாஹூர் முஹம்மதலி சாஹிபு கூறுவதைப்போல் நபி பெருமானார் (ஸல்) அவர்களின் உம்மத்தில் எவருக்கும் வஹீ வரவேமாட்டாதென்பதைத் தெளிவாய்த் தெரிந்து கொள்ளலாம். சாதாரண மனிதர்களுக்கும், நபிமார்களுக்குமிடையிலுள்ள முக்கியவித்தியாசங்களில் வஹீயும் ஒன்றாகும். எமது நபிகள் பெருமான் (ஸல்) அவர்களின் உம்மத்துகளுக்கும் இறைவனின் வஹீவருவதாயிருந்தால், மேற்கூறியபடி இறைவன் குர்ஆனில்கூறியிருக்கமாட்டான். குர் ஆனின் எந்த அத்தியாயத்திலும், ஹதீஸ்களிலும் உம்மத்தே முஹம்மது (ஸல்) அவர்களுக்கு வஹீவருமென்று கூறப்படவே கிடையாது. எமது பரிசுத்த இஸ்லாம் மதமானது சம்பூரணமானதாயும், எமது உலகரட்சகர் ரஸூலேகரீம் சையதினா ஹஜ்ரத் முஹம்மது முஸ்தபா (ஸல்)அவர்கள் கடைசி நபியாயுமிருக்கிறார். "இன்று நான் உங்களுக்கு உமது மார்க்க (இஸ்லா)த்தை சம்பூரணமாக்கி விட்டேன்" (ஸூரேமாயிதா)"முஹம்மது (ஸல்) அவர்கள் உங்களில் எவருக்கும் பிதாவல்ல, ஆனால், இறைவனின்

ரஸூலாகவும், நபிமார்களுக்கெல்லாம் முத்திரையானவராகவுமிருக்கிறார்" (குர்ஆன்ஸூரே அஹ்ஸாப்) ஆதலின் மேல்கூறிய குர் ஆனின் ஆயத்துகளின்படி எமது பரிசுத்த இஸ்லாம் மார்க்கம் சம்பூரணமாய் விட்டதென்றும், நபிகள் நாயகம் ஸர்வரே ஆலம் (ஸல்) கடைசி நபி யென்றும், இறைவனே தீர்ப்பளித்து விட்டபடியாலே இனி வேறு மதமும், நபியும், வேதமும் அவசியமில்லை. இதை முஹம்மதலி சாஹிபும் ஒப்புக்கொள்கிறார். "தீனே இஸ்லாம் சம்பூரணமானதாயிருக்கிறது. இதற்கு முன் எத்தனை மதங்களிருந்தனவோ! அவை காலம், வர்க்கம், இவ்விரண்டை யனுசரித்ததாயிருந்தன. ஆதலின், மார்க்கத்தைச் சம்பூரணமாக்க (இறைவனினால்) அன்பியாக்களை யனுப்பவேண்டியதவசியமாயிருந்தது. எப்போது "இன்று நான் உங்களுக்கு உங்களின் மார்க்கத்தைச் சம்பூரணமாக்கி விட்டேன்" (என்ற குர் ஆன் ஆயத்து) இறங்கி விட்டதோ; அத்துடனேயே நுபுவ்வ (நபிப் பட்ட)த்தின் அசியமும் முடிவடைந்து விட்டது ஆதலின், ஹஜ்ரத் முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்கள் உலகிற்குப் பூரண வழி காட்டுபவரும், கடைசி நபியாகவும், தீர்மானிக்கப் பட்டதினால், வேறு புதிய மதம், அன்பியா இவைகளின் அவசியமில்லை. (தஅவதே அமல் பக்கம் 6) சகோதரர்களே! முஹம்மதலி ஸாஹியின் மேற்கூறிய வாசகத்தால் அவர், எமது நபிகள் பெருமான், ஸர்வரே காயினாத் (ஸல்) அவர்களே கடைசி நபியென்றும், அவரோடு நுபுவ்வத்தும் முடிவடைந்து விட்டதென்றும் அவருக்குப் பின் வேறு மதம், நபி, அவசியமில்லையென ஒப்புக்கொண்டுள்ளாரென்பது நன்கு தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு கூறும் அலிசாஹிபு நாம் மேலே கூறினவாறு வஹீயானது நபிமார்களுக்கே அவசியமும், சொந்தமென்றும், நபிபெருமா

ஞரோடு நுபுவ்வத் முடிவடைந்து விட்டதேபோல் வஹீ யும் முடிவடைந்து விட்டது. அவருக்குப் பின் எவருக்கும் வஹீ வரவேண்டிய அவசியமுமில்லை வரவு மாட்டாது. இதையறியாமற் போனது தான் ஆச்சரியமாயிருக்கிறது. உலக முடிவு வரையிலும் உலக மக்களுக்கெமது நபிபெரு மானார் (ஸல்) அவர்களே நபியாகவும், மாசற்ற குர்ஆன் ஷரீபே வேதமாகவுமிருக்கிறது. கியாம நாள் வரையும், முக்காலத்திற்கு வேண்டிய விஷயங்கள் இவ்வேதத்திலேயே யிருக்கிறது. ஆதலின் இதரர்களுக்கு இறைவன் வஹீயின் மூலியமாய்க் கட்டளை யனுப்பவேண் டிய அவசியமேயில்லை. இவ்வாறிருக்க மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி தான்'' நபியென்றும், வானத்திலிரு ந்து குர்ஆனைக் கொண்டு வந்ததாகவும் தனக்கு வஹீவரு கிறதென்றும், வீண்பறை சாற்றினதானது அபாண்டப் பொய்யோடும் மாயாஜால தந்திரமென்பதில்லைய முண் டோ? "ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் நபி-பெருமானாரிடம் வந்து'' முஹம்மது (ஸல்)மே! பூமியின்மீது இது எனது கடைசி தடவையான வருகையாகும். இப்போது வஹீ நின்று விட்டது. இனி நான் உலகிற்கு வரவேண்டிய அவசியமில்லை; தங்களுக்காக வேண்டி நான் வந்து கொண் டிருந்தேன். ஆகையால் இனி யான் எனது ஸ்தானத்தில் தரிபட்டிருப்பேன்'' என்று கூறியதாக ஹுஜ்ஜதுல் இஸ்லாம் இமாம் கஜ்ஜாலி (ரஹ்) அவர்கள் தமது "முகா ஷிபதுல் குலூப்'' என்னும் நூலின் 111-வது பக்கத்தில் கூறியுள்ளார். (அஸ்மி அய்யார் அகாயித் காதியானி பக்கம் 7) ஹஜ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறுவதாவது: "எச்சரிக் கை நிச்சயமாக நான் நபி யல்ல, எனக்கு வஹீயும் வருவ தில்லை'' (மி. அ. கா. பக்கம் 8) அல்லாமா முல்லா அலிகாரி

(ரஹ்) அவர்கள் கூறுவதாவது: "எவன் முஹம்மது (ஸல்) அவர்களுக்குப்பின் வஹீவருமென்று நம்புகிருனே; அவன் இஜ்மா முஸ்லிம்களிடத்தில் காபிராயிருக்கிருன். நாயகம் (ஸல்) அவர்களின் உம்மத்துகளுக்கும் வஹீவருமென்பதற்கு, பீபிமரியம் (அலை) ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் ஹவாரிய்யூன்கள், ஹஜ்ரத்மூஸா (அலை) அவர்களின் தாயாருக்கு வஹீவந்ததாயும் அதையே அத்தாக்ஷியாகக்காண்பிக்கிருர். ஈண்டு அதைப்பற்றி சற்று ஆராய்வோம். I. ஹஜ்ரத் ஜிப்ராயீல் (அலை) அவர்கள் மரியம் (அலை) அவர்களிடம் வந்து "ஏமரியம் (அலை) மே! நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு (குமாரன் ஜனிக்க) தனது கட்டளையைக்கொண்டு சந்தோஷகரமான சங்கதியை அறிவிக்கிருன். (அக்குமாரரின்) பெயர் மரியமி (அலை) ன் மகன் மஸீஹ் ஈஸா" இவ்விஷயம் ஸூரே ஆலஇம் ரானிலுள்ளது. II. நாம் ஹவாரியீன்களுக்கு என்னை (இறைவனை) க்கொண்டும் எனது ரஸூலை (ஈஸா அலை-மை) க்கொண்டும் ஈமான் கொள்ளும்படியாய் வஹீ அறிவித்தோம்" (ஸூரேமாயிதா) III. மூஸா (அலை) மின் தாயாருக்கு (குழந்தைப்பருவத்திலுள்ள மூஸா நபிக்கு) பாலூட்டி (பிர் அவ்ன் மூஸாநபியைக்கொன்று விடுவானென்கிற) பயமிருக்குமாயின் தண்ணீரில் (நீலாற்றில்) போட்டு விடும்படியாய் (பெட்டியில் மூஸா நபியை வைத்துப்போடும்படி 20-ம் ஸூரா 2-ம் ருகூவில் வருகிறது) வஹீ அறிவித்தோம் (ஸூரேகஸஸ்)

1 இலக்கமிட்ட ஆயத்தில் வஹீயென்ற பதம் வரவில்லை. ஆனுல்; மரியம் (அலை) இடம்மலக்கு வந்து சொன்னதாகக் கூறப்பட்டுள்ளது. மேற்படி சந்தோஷகரமான விஷயம் மரியம் (அலை) அவர்களுக்கே சொந்தமானவையே

யன்றி நபிமார்களுக்கு வரும்படியான வஹீயும் உலகமக்க ளுக்கு ஏவலுமல்லவென்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

II. இலக்கமிட்ட ஆயத்தில் வஹீ என்ற பதம் வந் திருக்கிறது. அதற்கு இல்ஹாமுடைய அர்த்தம் தான் கொள்ளப்படும். அதாவது அல்லாஹ்வுக்கும் அவனின் ரஸூலுக்கும் ஈமான் கொள்ளும்படியான எண்ணத்தை அந்த ஹவாரியீன்களுக்கு மனத்தில் உதிக்கச்செய்தான் என்று பொருள் கூறவேண்டும். பண்டைக்கால கல்விக் கடல்களான மகான்களும், இமாம்கள், முபஸ்ஸிரீன்களும் இதேபொருள்தான் கூறியுள்ளார்கள். இறைவன் புரத் தால் மனதில் உதிக்கும் விஷயத்திற்கு இல்ஹாம் என்று பெயர். (இது விஷயமாய் இல்ஹாம் என்னும் தலைப்பின் கீழ் வரையப்பட்டுள்ளதில் சற்று விரிவாய் எழுதப்பட்டு ள்ளது) அகாரதியில் வஹீக்கு இல்ஹாமுடைய பொருளு மிருக்கிறது. ஆதலின், இஃது நபிமார்களின் வஹீக்கு சம்மந்தப்பட்டதல்ல.

III. இலக்கமிட்டுள்ள ஆயத்திலும் வஹீயென்ற பதம் வந்திருக்கிறது. அதற்கும் இல்ஹாமுடைய அர்த் தம் தான். ஹஜ்ரத் மூஸா (அலை) அவர்களின் தாயார், கொடுங்கோல் மன்னனை பிர் அவ்னின் கட்டளையின்படி தன் குழந்தையைக் கொன்றுவிடுவார்களென்று அச்சமுற் றவர்களாயிருந்ததால், மேற்கூறியவாறு பாலூட்டி, பெட்டி யில் வைத்து நீலாற்றில் விட்டு விடும்படியாய் அவர்களின் மனதில் இறைவனின் புரத்தால் இல்ஹாம் உதித்தபடி யால் அவ்வாறே செய்தார்கள். இம்மூன்று விஷயங்களா லும் மேல் கூறப்பட்டுள்ள விஷயங்கள் தனிப்பட்ட நபர்

களுக்குச் சொந்தமானதேயன்றி பிறருக்கு இதில் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்பது நன்கு புலப்படும். நபிமார்களின் வஹீயோ அவ்வாறல்ல. உலகமக்களை நன்மையைக்கொண்டேவவும், தீமையை விட்டு விலக்கவும், ஏகத்துவம், சமத்துவம், சகோதரத்வம், முதலியவைகளைக் கொண்டேவவுமேயாகும். ஆதலின் இம்மூன்று விஷயங்களுக்கும், நபிமார்களின் வஹீக்கும் வித்தியாசமுண்டு. “நிச்சயமாக நாம், நூஹ்(அலை) இன்னும் பின்னுலுண்டானவர் (நபிமார்) களுக்கு வஹீ அனுப்பியதைப் போலும், இன்னும் இப்ராஹீம், இஸ்மாயீல், இஸ்ஹாக், யஅகூபு (அலை) யஅகூபு (அலை) மக்களுக்கு வஹீ அனுப்பியதைப்போலும், இன்னும் ஈஸா, அய்யூபு யூனுஸு, ஹாரூன், ஸுலைமான் (அலை) அவர்களுக்கு வஹீ அனுப்பியதைப்போலும், உங்களுக்கு (முஹம்மது-ஸல்-) க்கு வஹீ அனுப்பியிருக்கிறோம்.” (குர் ஆன் ஸூரதுன்னிஸா) அல்லாஹுத்த ஆலா இத்திருவசனத்தில் நபிமார்களுக்கு அனுப்பிய வஹீயைப் போலவே, நமது நபிகள் பிரான்முக்பரேஸாதிக் (ஸல்) அவர்களுக்கும் வஹீ அனுப்பியதாகக் கூறியிருக்கிறானேயன்றி, ஹஜ்ரத் மரியம் (அலை) ஹஜ்ரத் மூஸா (அலை) அவர்களின் தாயார், ஹவாரியீன் இவர்களுக்கு அனுப்பிய வஹீயைப்போலென்று கூறவேயில்லை. ஆதலின், முஹம்மதலி சாஹிபின் அத்தாக்ஷிகள் சுத்தப்பொய்யென்பதற்கு இவ்வாயத்தே தக்கசான்றாகும். நாம் மேலே கூறியுள்ளபடி வஹீ நபிமார்களுக்கேயன்றி இதரர்களுக்கு வரவே மாட்டாது வரவேண்டிய அவசியமுமில்லை. இவ்வாறே உலகமுடிவுவரை எவருக்கும் வஹீ வரவும் மாட்டாது வரவேண்டிய அவசியமேயில்லை என்று பன்முறை வற்புறுத்திக்கூறுகின்றோம்.

## இல்ஹாம்.

மிர்ஸாகுலாம் அஹ்மதுகாதியானியின் சிஷ்ய கோஷ்டியினர் தம்குருவிற்குவஹீவரவில்லை. ஆனல், இல்ஹாம் மூலியமாய் எல்லா விஷயங்களும் தெரியவந்தனவென வொருக்கால் கூறலாம். அதற்கு எமது மறுப்பாவது:—

எமது பரிசுத்த இஸ்லாம் மதத்தில் இல்ஹாம் ஷரீஅத்தின் அத்தாக்ஷியாகவே மாட்டாது. பரிசுத்தமான மனதுடையோர்க்கு இறைவனின் புறத்திலிருந்து அவர்களின் மனதில் உதிக்கும் விஷயத்திற்கு இல்ஹாமென்று சொல்லப்படும். அந்த இல்ஹாம் எமது ஷரீ அத்திற்குட்பட்டிருக்க வேண்டியது அவசியமாகும். தவிர எவருக்கு இல்ஹாம் உண்டாகிறதோ; அவர் மட்டும்அதின்படி நடக்கலாமேயன்றி பிறருக்கு அதன்படி நடக்க வற்புறுத்திக் கூறவோ; ஏவவோ கூடாது. எவினல் பிறர் அதன்படி நடக்கக்கூடாது. இல்ஹாம் உண்டானவரும் தமது இல்ஹாம் ஷரீ அத்திற்குட்பட்டதா வென்பதைக் கவனிக்க வேண்டும். ஷரீஅத்திற்கு விரோதமாயிருக்குமாயின் அதைத்தள்ளிவிடவேண்டும். ஒருவருக்கு உண்டாகும் இல்ஹாமைப் பின்பற்றி நடக்க எமது குர்ஆன் ஹதீஸுகளில் எவ்வித ஆதாரமுங் கிடையாது. உலகமக்களுக்கு குர்ஆனும், ஹதீஸுகளும் பூரணவழி கட்டிகளாயிருக்கும் போது ஒருவரின் இல்ஹாமைப் பின்பற்றி நடக்க வேண்டுமென்ற அவசியமே கிடையாது. ஒருக்கால் இல்ஹாமைப் பின்பற்றி நடக்கலாமென்று வைத்துக் கொண்டால், அதனல் அநேக கெடுதல்களும், கஷ்ட நஷ்ட விபரீதங்கள் விளையும். ஒருவர் சொல்லுகிறார், எனக்கு இன்னவிதமான இல்ஹா முண்டாயிருக்கிறது. இரண்டாவதொருவர் என

க்கு இன்னவிதமாய் உண்டாயிற்றென்றும், மூன்றாவதொருவர் ஒருவிதமாயும் சொல்லக்கூடும். ஒன்றுக்கொன்று முரண்பட்டால் எதை ஏற்றுக்கொள்வது? எதை மறுத்துவிடுவது? இவ்வாறு ஒன்றோடொன்று விகர்ப்பம் ஏற்படுமாயின் ஜனங்கள் தங்கள் தங்கள் இஷ்டப்படி மூன்று பேரையும் பின் தொடருவார்கள். இதனால் கக்ஷிப் பிரதிகக்ஷிகள் ஏற்பட்டு வழிகேடுண்டாய் யொற்றுமை, சமத்துவம், சகோதரத்துவம் சமாதானமென்பதே நிலைத்திராது என்பது திண்ணம். எமது பரிசுத்த ஷரீஅத்து ஒவ்வொரு விஷயத்தையும் வெகு தெளிவாய் வரையறுத்துக் கூறியிருக்கின்றபடியால் எவருடைய இல்ஹாமும் நமக்கு அவசியமில்லை. அவ்வில்ஹாம் ஷரீஅத்திற்கு அத்தாக்ஷியாகாது. "ஷைத்தான் உங்களிடம் தர்க்கம் புரிவதற்கான விஷயங்களைத் தனது நண்பர்களின் மனதில் உதிக்கச் செய்கிறான்" (குர்ஆன் ஸூரே அன் ஆம்) இவ்வாயத்தால் ஷைத்தானினாலும் இல்ஹாமுண்டாகின்றதென்பதை நன்கறியலாம். இதற்குத்தான் இல்ஹாமே ஷைத்தானியென்று சொல்லப்படும். இனி மிர்ஸா ஸாஹிபின் இல்ஹாமைக் கவனியுங்கள். அவற்றைக் கவனிப்பீர்களாயின், அவரின் இல்ஹாம் எவ்வளவு பரிசுத்தமானதென்றும், உண்மையானதென்றும் நன்குணர்ந்துக் கொள்ளலாம். முஹம்மதி பேகத்தைக் கலியாணம் செய்துக்கொள்வதற்காக அப்பெண்மணியின் பிதா மிர்ஸா அஹமது பேக் அவர்களுக்கு எழுதிய கடித சாராம்சம் கீழே மொழி பெயர்த்தெழுதியிருக்கிறேன். சகோதரர்கள் ஊன்றிப்படித்துப் பார்ப்பீர்களாக:—

### கடிதம்

உமது குமார்த்தி முஹம்மதி பேகத்துக்கும் எனக்கும் வானுலகில் நிக்காஹ் ஆய்விட்டது. எனக்கு லாயிலாஹா

இல்லல்லாஹு என்பதில் எவ்விதமான உறுதியுள்ளதோ? அவ்வாறே இந்த இல்ஹாமில் உறுதியிருக்கிறது. ஆண்டவனால் செய்யப்பட்ட காரியம் அவசியம் ஆகுமென்று சத்தியமாய்ச் சொல்லுகிறேன். முஹம்மதி பேகம் அவசியம் என் நிக்காஹ்வில் வருவார். வேறு இடத்தில் நிக்காஹ் செய்து கொடுபீர்களானல், இஸ்லாத்திற்குப் பெரிதும் இழிவாகும். ஏனெனில் பத்தாயிரம் ஜனங்களில் இம்முன்னறிக்கையை விளம்பரப்படுத்தி விட்டேன். நீங்கள் (மிர்ஸாவுடன் நிக்காஹ்வின் சம்பந்த) முறை செய்து கொள்ளவில்லையானல், எனது இல்ஹாம் பொய்யாய் விடும். உலகம் நகைக்கும். வானுலகில் நடந்த விஷயம் பூமியில் ஒருக்காலும் மாறுபடாது. இம்முன்னறிக்கை முழுவதும் நிறைவேற தாங்கள் உதவியாய் இருக்க வேண்டும். வேறிடத்தில் முறை கொள்வது மங்களகரமாகாது. குலாம் அஹ்மது (மி. அ. கா. பக்கம் 57)

இவரின் நிருபத்தின் படி காரியம் நடந்தேறிற்ரு? இல்லை. மிர்ஸா அஹ்மது பேக்தன் குமார்த்தி முஹம்மதிபேகத்தை வேறு ஒருவருக்குக் கலியாணம் செய்து கொடுத்து விட்டார். ஆதலின் மிர்ஸாவின் இல்ஹாம் பொய்யென்பதில் சந்தேகமுண்டோ? லாயிலாஹா இல்லல்லாஹுவைப்போல் தன் இல்ஹாமிலிருந்த உறுதி எங்கே? சத்தியமிட்டுக்கூறியது என்னவாயிற்று? இஃதன்றி, 1891-வரு மே-மீ 4 தேதிலுதியானவிலிருந்து மிர்ஸா அஹ்மது பேக்கின் சகோதரிக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். அவ்வம்மையார் மிர்ஸா ஸாஹிபின் குமாரருக்கு மாமியாராவர். அதில் தன் சகோதரருக்குச்சொல்லி அவரின் பெண்ணைத் தனக்குக் கலியாணம் செய்து கொடு

க்கும்படியாய்ச் செய்யவேண்டுமென்று வற்புறுத்திக்கூறி யிருப்பதுடன், அவ்வாறு செய்யாவிடில் தன் குமாரரிடம் சொல்லி அவ்வம்மையாரின் குமார்த்திக்கு தலாக் சொல்லி விடும்படியாய் கடிதம் எழுதியிருப்பதாயும் வரைந்துள் ளார். இது என்ன நியாயம்; சற்று சிந்தித்துப்பாருங்கள். நியாயமா? இல்லையா? என்பதை ஆராய்ச்சி செய்யவேண் டிய அவசியமில்லை. நேயர்களே; உணர்துகொள்ளலாம். ஆனால், மிர்ஸாவின் இல்ஹாம் என்ன வாயிற்றென்பது தான் கேள்வி, பொய்யான இல்ஹாம் எவ்வாறு உண்மை யாகும். மிர்ஸா ஸாஹிபுக்கு முன்னால் சூபி அப்துல்ஹக் ஸாயபவர்கள் இறந்து போய் விடுவாரென்று சொன்னார் ஆனால் சூபி சாயபுக்கு முன்னாலேயே மிர்ஸா சாஹிபு விண்ணுலகமேகிவிட்டாரென்று ஸஹீபே முஹம்மதியா 4-ம் பக்கத்தில் கூறப்பட்டுள்ளது. ஆதலின் மிர்ஸா சாஹி பின் இல்ஹாம்கள் முற்றிலும் பொய்யேயாயின.

## ஹஜ்ரத் ஈஸா (அலை) மரணமடைய வில்லை.

"ஹஸ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் பஞ்சபூதசரீரத்தால் வானுலகத்திற்குப் போகவும், அங்கே யுண்ணவும், குடிக்க வுமில்லாமலும், மனிதனுக்கு அவசியமானவைகளை விட்டு ஒரே நிலையில் உயிருடனிருக்கிறாரென்று முஸல்மான்கள் கொண்டுள்ள கொள்கை தப்பென்று 1891 ஹு (மிர்ஸா ஸாஹிபிற்கு) இறைவனால் வெளியாக்கப்பட்டது!" (தஅ வதே அமல் பக்கம் 10 பார்க்க) மிர்ஸா குலாம் அஹமது காதியானி கூறுவதைக் கவனியுங்கள். "அல்லா வுடைய ரஸூல் மஸீஹ் இப்னுமரியம் (அலை) மரணமடைந்து விட் டார், (ஆதலின்) வாக்குறுதியின்படி அவரைப்போல் நீ (மிர்ஸா ஸஹிபு) வந்திருக்கிறாய்" இஸாலே அவ்ஹாம்

பாகம் 2 பக்கம் 561) என்று மிர்ஸாவுக்கு சொந்த இல்ஹாம் உண்டாயிற்றும். நவூது பில்லாஹி.

அஹ்லெ ஸுன்னத் வல்ஜமா அத்தினராகிய நமது உறுதியான நம்பிக்கை யென்னவென்றால் ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்கள் எவ்வித சந்தேகமுமின்றி நிச்சயமாய் வானுலகில் ஜீவித்துக் கொண்டிருக்கிறார்; கடைசி காலத்தில் வானுலகிலிருந்து இறங்கியும் வருவாரென்பதேயாகும் இதற்கு எமது மாசற்ற குர்ஆன் ஷரீபும், உலகரட்சகர் ரஸூலேகரீம் (ஸல்) அவர்களின் திருமொழிகளுமே தக்க சான்றுகளாயிருக்கின்றன. இவற்றை மறுத்துக்கூற எவராலும் முடியாதென்பது திண்ணம். 1300 வருஷங்களாயும் எவருக்கும் வெளித்தோன்றாத உண்மையு மிரகசியமும் மிர்ஸா ஸாஹிபிற்கு பட்டும் வெளியாக வேண்டிய காரணமென்ன? நபிமார்களுக்கெல்லாம் மிகச்சிறந்த வரும் உலகமக்களுக்கு அக்ஞானத்தை நீக்கி மெஞ்ஞானத்தை போதித்த ஜெக ஜோதியும், இறைவனின் ஹபீபுமாகிய எமது உலகிரட்சகருக்கும் சங்கைபெற்ற ஸஹாபாக்களுக்கும், அவுலியாக்கள் குத்புகள், இமாம்கள், இவர்களுக்கெல்லாம்வெளியாகாத இவ்வந்தரங்கம் மிர்ஸா ஸாஹிபுக்கு மட்டும் வெளிப்படக் காரணமென்ன? எதற்காக வெளியாக வேண்டும்? என்பதை சகோதரர்கள் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். இவ்விஷயம் மிர்ஸா ஸாஹிபிற்கு வஹீயின் மூலியமாய் தெரிய வேண்டும். அல்லது இல்ஹாமினால் தெரியவேண்டு. நாம் மேலே வஹீயானது நபிமார்களைத்தவிர வேறு எவருக்கும் எம்முகாந்திரத்தைக் கொண்டும் வரவே மாட்டாதென்றும், இல்ஹாம் ஷரீஅத்தின் அத்தாக்ஷியா காதென்றும் கூறியுள்ளோம். ஆத

வின், அவருக்கு வஹீயும் கிடையாது. இல்ஹாமும் கிடையாது. இஃதன்றி ஆயாத்து ஹதீஸூகளுக்குதம்யுக்தப்படி பொருள் செய்து ஹஜ்ரத் ஈஸா அலை ஹிஸ்ஸலாம் அவர்கள் மரணமடைந்து விட்டதாகக் கூறுகின்றனர். இதை ஸூன்னத் ஜாமா அத்து முஸ்லிம்கள் எம்முகாந்திரத்தைக் கொண்டும் ஒப்புக்கொள்ள முடியாது. எஹூதிகளும் ஈஸா (அலை) அவர்களைத் தாம் கொன்று விட்டதாகவே மனப்பால் குடித்துக் கொண்டிருந்தனர். அதற்கு ஏகபராபரனுகி ஸர்வசக்தியுள்ள இறைவன் மறுத்துக் கூறியிருப்பதை கவனித்துப் பாருங்கள்.

நிச்சயமாக நாம் (எஹூதிகள்) மரியமுடைய குமாரரும், அல்லாஹ் உடைய ரஸூலுமான மஸீஹ் ஈஸாவைக் கொன்று விட்டோமென்று சொன்னதினுலும், (அவர்கள்) அவரை (ஈசாவை) கொல்லவுமில்லை. சிலுவையிலறையவுமில்லை. எனினும் அன்னுரு (எஹூதி) க்கு முன் ஈஸாவைப்போலொருவனை (எஹூதியை) மாற்றப்பட்டது. (குர்ஆன் ஸூரதுன்னிஸா) இன்னும் இதே ஸூருவில் ஈஸா (அலை) அவர்கள் மரணமடையவில்லையென உறுதியாய் இறைவன் கூறுவதைப் பாருங்கள்.

"மெய்யாகவே அவரை (ஈஸாவை) க் கொல்லவில்லை, ஆனல் இறைவன் அவரைத்தன்னளவில் உயர்த்திக்கொண்டான். (ஸூரேநிஸா) இவ்வாயத்துகளில் இறைவன் எஹூதிகளின் கூற்றை மறுத்து ஈஸா (அலை) அவர்கள் மரணமடையவில்லை என்றும் தன் பக்கத்தில் உயர்த்திக் கொண்டதாய் உறுதியாகக்கூறியிருக்கிருன். இத்திருவசனங்களை காதியானி மிர்ஸாயிகளுக்கு தக்க மறுப்பாயிருக்கின்றன. இதனுல் ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்கள் வானத்தில் உயிருடன் வாழ்ந்துகொண்டிருக்கிருர்களே

ன்று நன்கு தெரிந்து கொள்ளலாம். ஒருக்கால் ஈஸா (அலை) அவர்கள் மரணமடைந்து விட்டிருப்பாராயின், எஹூதிகளுக்கு மறுப்பாக இறைவன் மேல் கூறியவாறு கூறவேண்டிய அவசியமேயில்லை.

நிற்க, ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மரணமடைய வில்லை, கடைசி காலத்தில் வானத்திலிருந்து வருவாரென் பதற்கு," இறைவன் திருமறையில் ஈஸா (அலை) அவர்களை க்கொல்லவுமில்லை. சிலுவையிலறையவுமில்லை என்று மேலே வரையப்பட்டுள்ள ஆயத்திற்குச் சேர்ந்தாப்போல் கூறியுள்ளதையிதோ கவனியுங்கள்.

"வேதக்காரர் (யஹூதி, நஸாராக்) களினின்றும் ஈஸா (அலை) அவர்களைக் கொண்டு அவரின் மௌத்துக்கு முன் ஈமான் கொள்ளாமலொருவருமிருக்கமாட்டார்கள்." (குர் ஆன் ஸூரேநிஸா.) அதாவது வேதக்காரர்களெல்லாம் ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மௌத்துக்கு முன்னுல் அவரைக்கொண்டு ஈமான் கொள்வார்களென்பதே முதலத் தாட்சியாம்;

இவ்வாயத்தால் நபி ஈஸா (அலை) அவர்கள் மரண மடையவில்லை, அவர் இவ்வுலகிற்கு வந்தபின் வேதக்காரர் கள் ஈமான் கொள்வார்களென்பதைத் தெளிவாய்த் தெரி ந்து கொள்ளலாம். இஃதன்றி இவ்வாயத்து எதிர்காலத் தைக் குறித்து நிற்பதும் கவனிக்கத்தக்கது. ஹஜ்ரத் நபி ஈஸா (அலை) அவர்கள் வானத்திலிருந்து கடைசி காலத் தில் இறங்கும் விஷயமாய் ரிவாயத்து செய்துள்ள நாயகத் திருமொழியில் இறங்குவார்கள் என்பதற்கு அத்தாக்ஷி யாக மேல் கூறிய ஆயத்தை நாயகம் (ஸல்) அவர்கள் கூறிய

தாக ஹஜ்ரத் அபீஹுரைரா (ரலி) அவர்கள் ரிவாயத்து செய்திருக்கிறார்கள்.

இவ்வாயத்துகளைச் சற்றுங்கவனியாமல் காதியானிகள் தம்மனம்போனபடி மரணமடைந்து விட்டாரென்று கூறுவதில் யாதுபயன்? அறிஞர்கள், ஒருக்காலும் அவர்கள் கூறுவதை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். "அவர் ஈஸா அலை) கியாமத்தின் அடையாளமாயிருக்கிறார்.'' (குர்ஆன் ஸூரேஸுக்ரப்.) இவ்வாயத்தின் வியாக்கியானத்தை ஹஜ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்களின் ரிவாயத்தால் நன்கறிந்து கொள்ளலாம். அதாவது:—

"கியாம நாளுக்குச் சமீபத்தில் ஹஜ்ரத் ஈஸா அலை ஹிஸ்ஸலாம் அவர்கள் வானத்திலிருந்து பூமிக்கு வருவார், வந்து தஜ்ஜாலைக்கொல்லுவார். இதற்காக வேண்டியே அவரை கியாமததின் அடயாளமாயிருக்கிறாரென்று கூறப்பட்டிருக்கிறது." பண்டைக்கால சங்கை பெற்ற முபஸ்ஸிரீன்களும் இவ்வாறே வியாக்கியானம் செய்துள்ளார்கள். அதாவது:—"கடைசி காலத்தில் ஹஜ்ரத் ஈஸா அலை ஹிஸ்ஸலாம் அவர்கள் வானத்திலிருந்து இறங்கி வருவார்." இவற்றாலும், ஹஜ்ரத் ஈஸா (அலை) மரணமடையவில்லை. கடைசி காலத்தில் வானத்திலிருந்து இறங்கி வருவாரென்று நன்கு தெரிந்துக்கொள்ளலாம். ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மரணமடைந்து விட்டாரென்று காதியானிகள் காண்பிக்கும் ஆயத்தைப் பாருங்கள். "யாஈஸா-இன்னீ-முதவப்பீக-வ-ராபிவுக-இலைய்யா-(குர்ஆன்சூரே ஆல இம்ரான்) இதற்கு அவர்கள்" ஓ ஈஸாவே! உம்மை மரணிக்கச்செய்வனும், உம்மை என்னளவில் உயர்த்திக்கொள்பவனும்நானே என்றுபொருள் கூறுகிறார்கள். இவ்வாயத்து

மரணமடைந்து விட்டாரென்பதற்கு அத்தாக்ஷியாகாது. ஏனெனில், இறைவன் எஹூதிகளுக்கு மறுப்பாக "ஈஸா (அலை) மரணமடையவில்லையென்றும் தன்னளவில் உயர்த்திக்கொண்டதாயும் கூறியுள்ளமேலே வரையப்பட்டிருக்கும் அயத்திற்கு இவ்வாயத்து முறண்படுகின்றது. இறைவனது திருவசனங்கள் முன்னுக்குப்பின் முறண்படுமா? ஒருக்காலுமில்லை, இவர்கள் கூறும் பொருள்கள் ஸூன்னத்து ஜமா அத்து முபஸ்ஸிரீன்களுக்கு விரோதமாய் இருக்கின்றன. அதற்கு" ஏஈஸா (அலை) மே! நான், உம்மைக் கைப்பற்றிக்கொள்பவனும், உம்மை என்னளவில் உயர்த்திக்கொள்பவனுமாயிருக்கிறேன்.

இதுவே சரியான பொருளாகும். "முதவப்பீக" என்னும் பதத்திற்கு இமாமுல் முபஸ்ஸிரீன் ஹஜ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் "உம்மைக்கைப்பற்றிக்கோள்பவன்" என்று பொருள் கூறியிருக்கிறார். (தப்ஸீர் இப்னுஅப்பாஸ் பார்க்க) ஹஜ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் எமது நபிகள் பெருமான் முஹம்மது முஸ்தபா ரஸூலில் (ஸல்) அவர்களின் சிறிய தந்தையின் குமாரராயிருப்பதாலும், எமது நபிகள் பிரான் (ஸல்) அவர்களிடம் கேட்டறிந்தவாறே வியாக்கியானம் கூறியுள்ளார். இவருக்கு "வேதவியாக்கியாணிகளின் இமாம்" என்ற சிறந்த பட்டமும் உண்டு. இஃதன்றி இதரதப்ஸீர்களிலும் இவ்வாறே பொருள் கூறப்பட்டுள்ளது. ஒருக்கால் காதியானிகள் கூறுவதைப்போல் "ஓ ஈஸா (அலை) வே! உம்மை மரணிக்கச்செய்ப்வனும் உம்மை என்னளவில் உயர்த்திக்கொள்பவனும் நானே" என்ற பொருள் வைத்துக்கொண்டாலும் மிர்ஸாயி காதியானிகள் ஈஸா (அலை) மரணமடைந்து விட்

டார்களென்று நிரூபிக்கமுடியாது. இதில் "மரணிக்கச் செய்பவனும்" "உயர்த்திக்கொள்பவனும்" என்ற சொற்றொடர்கள் வந்துள்ளதேயன்றி "மரணிக்கச்செய்து விட்டதாயும், உயர்த்திக்கொண்டதாயும் சொல்லப்படவில்லை. தவிர, மரணமடையச் செய்துவிட்டால், உயர்த்திக்கொள்ளவேண்டிய அவசியமில்லை. ஆதலின், மரணமடைந்து விட்டாரென்பதற்கு இதில் எவ்வித ஆதாரமுங்கிடையாது. இஃதன்றி குர் ஆனில் மற்றெந்த இடத்திலும் கூறப்படவுமில்லை. "மரணிக்கச் செய்பவனும்" "உயர்த்திக்கொள்ளுபவனு" மென்னுஞ் சொற்றொடர்களானது எதிர் காலத்தைக் குறித்து நிற்கின்றன. மேலே வரையப்பட்டுள்ள ஆயத்தில் அதாவது "நிச்சயமாக அவரை (ஈசாவை) க் கொல்லவில்லை. ஆனல், இறைவன் அவரைத்தன்னளவில் உயர்த்திக்கொண்டான்" என்ற ஆயத்தில் "உயர்த்திக் கொண்டான்" என்பது சென்ற காலத்தைக் குறிக்கின்றது. இதனல் உயிருடன் உயர்க்கப்பட்டுப் போனரென்பது தெளிவாய்ப்புலப்படுகிறது. இன்னும் இவ்வாயத்தில் "கொல்லவில்லை" என்ற பதமுஞ்சென்ற காலத்தைக்கொண்டே வந்திருக்கிறதைக் குறிப்பிடத்தக்கது. மரணமடைந்து விட்டாரென்பதற்கு ஆதாரமுண்டோ? இல்லவே இல்லை. "அவர் (ஈஸா) கியாமத்தின் அடையாளமாயிருக்கிறார்" என்ற ஆயத்தின்படியும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் திருமொழிகளின்படியும் கடைசி காலத்தில் வானத்திலிருந்து இறங்கிவருவாரென்பது நிச்சயம்.

## நாயகத் திருமொழி

1. அல்லாஹ் மரியம் (அலை) அவர்களின் குமாரர் ஈஸா (அலை) அவர்களை அனுப்பும்போது, திமிஷ்கின்

கிழக்குப் பக்கத்திலுள்ள வெள்ளை மினாருவின் மீது, சாய மேற்றின இருதுணிகளை அணிந்தவராக, இருமலக்குகளின் தோளின் மீது கையைவைத்துக்கொண்டு இறங்குவார். அவர் தமது தலையைக்குனியவைத்தால் வேர்வைவரும், உயர்த்தினால் பிரகாசத்தைப் போலும், முத்துக்களைப்போலும் (வேர்வை) இறங்கும்........(ஹதீஸ்ராவிநவாஸ் பின் ஸமி ஆன் ரஸி.)

2. எவனின் கையில் எனது நப்ஸ் இருக்கின்றதோ! அவன் (இறைவன்) மீது ஆணையாக உங்களில் மரியம் (அலை) மின் குமாரர் ஈஸா (அலை) இறங்குவார்கள். அவர் அரசராயும், நீதி செலுத்துபவராயுமிருப்பார். சிலுவைகளை முறிப்பார். பன்றிகளைக்கொல்லுவார். கப்பங்கட்டுவதை நீக்கிவிடுவார். பொருள் அதிகமாய் விடும். யாசகம் (கொடுத்தால் பெற்றுப்கொள்பவரேயில்லை. உலகத்தை விடவும் அதிலுள்ளவைகளை விடவும், ஒரு சாஷ்டாங்கம் (இறவனுக்கு) செய்வதே நன்மையெனக் கொள்வார்கள். (ராவி அபீஹுறைரு ரஸி)

3. நபிகள் பெருமான் சர்வரேகாயினத் (ஸல்) அவர்கள் இப்னுஸய்யாதைச் சந்தித்த போது ஹஜ்ரத் உமரிப்னுல்கத்தாப் (ரஸி) அவர்கள் அவனை (இப்னுஸய்யாதைக்) கொல்வதற்கு உத்திரவு கொடுக்கவேண்டுமென்று கேட்ட போது நபிகள் பிரான் (ஸல்) அவர்கள் "அவன் (இப்னுஸய்யாத் தஜ்ஜாலாகவே) யிருந்தால், நீர் அதற்குடையவரல்ல. மரியம் (அலை) மின் குமாரர் ஈஸா (அலை) அவர்களே அவனைக்கொல்ல ஏற்பட்டவர்" என்று கூறிவிட்டார்கள். இப்னுஸய்யாத் தஜ்ஜாலென்றே நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னார்கள். (ராவிஜாபிர் ரஸி)

4. தஜ்ஜாலைச் சாட்டப்படும் போது முஅமீன்கள் பைத்துல் முகத்தஸில் சேகரமாவார்கள். அச்சமயம் எனது சகோதர் மரியம் (அலை) மின் குமாரர் ஈஸா (அலை) வானத்திலிருந்து இறங்கிவருவார். (ராவி இஸ்ஹாக்பின் பஷர்-இப்னுஅஸாகிர் ரலி நீளபான ஹதீஸின் ஓர் பாகம்.)

5. மரியம் (அலை) அவர்களின் குமாரர் ஈஸா (அலை) (வானத்திலிருந்து) இறங்குவார். அவர் (ஜனங்) களின் அமீர் (மஹ்தி அலை) நமக்கு தொழுக வைக்க வாருங்கள் என்று சொல்ல (ஈஸா-அலை-அவர்கள்) இல்லை; உங்களில் சிலர் சிலருக்கு அமீராகவிருக்கிறார்கள். அல்லாஹ் இந்த உம்மத்துகளை சங்கையாக்கி வைத்திருக்கிறன். என்று சொல்லுவார்கள் .(ராவிஜாபிர் ரலி)

6. மரியம் (அலை) அவர்களின் குமாரர் ஈஸா (அலை) பூமியளவில் இறங்குவார் கலியாணம் செய்து கொள்வார். குழந்தையும் பிறக்கும். (ராவி அப்துல்லாஹிப்னு உமர் ரலி)

7. தஜ்ஜால் வெளிப்படுவான்...........அப்போது அல்லாஹ் மரியம் (அலை) மின் குமாரர் ஈஸா (அலை) அவர்களை அனுப்புவான். அவர் (ஈஸா) "அருவதிப்னுமஸ்வூ" தைப்போலிருப்பார். தஜ்ஜாலைத் தேடிப்பிடித்துக்கொன்று விடுவார். (ராவி அப்துல்லாஹிப்னு உமர் ரலி) நவ்வாஸ் பின்ஸமி ஆன் (ரலி) அவர்களால் நிவாயத்துச் செய்யப்பட்டுள்ள ஓர் ஹதீஸில் ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தஜ்ஜாலை "பாபுலுத்" என்ற இடத்தில் கொல்லுவார், என்று கூறப்பட்டிருக்கிறது. முஸ்லீம் சகோதரர்காள்! மேற்கூறியுள்ள நாயகத்திருமொழிகளைச் சற்று ஊன்றிப்படித்துப்பாருங்கள். , அவ்வாறு படித்துப் பார்ப்பீர்களாயின் ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மரணமடையவேயில்லை. அவசியம் வானத்திலிருந்து இறங்குவார்களென்று நன்கு தெரிந்து கொள்ளலாம். ஈஸா (அலை) அவர்கள் இறங்கு

வார்களென்பதற்கு "மறுபடியும் ஈஸா (அலை) வருவாரென்பதல்ல, ஆனால், அவரின் தத்துவம் இந்த உம்மத்தின் முஜத்திதுகள் ஒருவரில் அமையப்பெற்று வெளிப்படுவார்" என்பதே (த-அ-பக்கம் 16.) இஃது விந்தையினும் விந்தையே! இவரின் கூற்றிற்கு எவ்வித ஆதாரமும் கிடையவே கிடையாது. ஹதீஸுகளில் மரியம் (அலை) மின் குமாரர் ஈஸா (அலை) இறங்குவார்களென்று வந்திருக்கும் போது தத்துவமுடையவரென்பதற்கு அர்த்தமே கிடையாது. 1-வது இலக்கமிட்ட திருமொழியில் "மரியம் (அலை) மின் குமாரர் ஈஸா (அலை)" "திமிஷ்கின் வெள்ளைமினாருவின்மீது இறங்குவார்" "துணிகள் அணிந்திருப்பார்" "முத்துகளைப் போல் வேர்வை வடியும்" என்ற சொற்களும் 4-6 இலக்கமிட்டுள்ள நாயகத்திருமொழிகளில் "வானத்திலிருந்து இறங்கிவருவார்" பூமி அளவில் (அதாவது பூமியின் மீது) இறங்குவார்" என்ற பதங்கள் வந்திருப்பதால் இவ்வமிர்த சொற்களே சூரியனைக்கண்ட பனி பறந்தோடுவதைப்போலும், ஜோதியைக்கண்ட இருள் பறந்தோடுவதைப்போலும் தத்துவமுடைய ஒருவர் என்று கூறும் கூற்றானது தகர்க்கப்பட்டு பறந்தோடச் செய்யப்போதுமானவைகளாயிருக்கின்றன. தத்துவமுடைய ஒருவர் வெளிப்படுவாரென்றிருக்குமாயின், எம்பெருமான் நபிகள் நாயகம் முஹம்மது முஸ்தபா ரஸூலில் (ஸல்) அவர்கள் மேற்கூறியவாறு விபரமாயும் மிகத்தெளிவாயும், கூறியிருக்கவேமாட்டார்; ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்களே பிற்காலத்தில் வானத்திலிருந்து இறங்கி வருவபராயிருப்பதினால், மேல் கூறியவாறு விபரமாயும் தெளிவாயும் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்களென்று ஒவ்வொருவரும் உறுதி கொண்டவர்களாயிருக்க வேண்டும். முஹம்மத் அலி ஸாஹிபு தூதன வியாக்கியா

னங்கள் செய்து கூறினல் அதை ஒப்புக்கொள்பவர் யார்? இவற்றுலெல்லாம் ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இறந்து விட்டாரென்று நிரூபிக்க ஒருக்காலும் முடியாதென்பதை அலிஸாஹிபு அறிய வேண்டும். முஸ்லிம்களுக்கு குர்ஆன் ஹதீஸ்கள் பூரண வழிகாட்டிகளாயிருக்கும் போது இவரின் நூதன வியாக்கியானங்கள் எமக்குத் தேவையில்லை. தவிர, ஹதீஸில் ஒவ்வொரு நூற்றுண்டிலும் முஜத்திதுகள் தோன்றுவார்களென்று வந்திருக்கின்றதேயன்றி முஜத்திதுகளில் ஒருவரில் ஈஸா (அலை) அவர்களின் தத்துவம் அமையப்பெற்று வருவாரென்று வரவே கிடையாதென்பது திண்ணம். ஈஸா (அலை) அவர்களின் தத்துவம் அமையப்பெற்ற ஓர் முஜத்திதே வருவாரென்றும், ஈஸா (அலை) வரவே மாட்டாரென்பதற்குக் கீழ்கண்ட காரணம் கூறுகிறுர்:— "நபி வருவதானல் நுபுவ்வத்தின் வேலைக்காக வரவேண்டும். நுபுவ்வத்தின் வேலையோ முடிவடைந்து விட்ட போது நபியும் வருவதில்லை. பழைய, புதிய நபிகளில் எவ்வித வித்தியாசமுமில்லை, ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்களை நுபுவ்வத்தை விட்டு நீக்கி அனுப்புவது அறவே அர்த்தமில்லாதது என்பதை முஸ்லிம்கள் கவனிக்கவில்லை. நபி நுவ்வத்தை விட்டு எவ்வாறு நீங்கக்கூடும். (த-அ பக்கம் 15.) இவ்விஷத்தை அலி சாஹிபு சற்று நிதானித்துப்பார்க்காமல் வரைந்து விட்டார். எமது நபிகள் பெருமான் முஹம்மது (ஸல்) அவர்களைக்கொண்டே நுபுவ்வத் முடிவரைந்து விட்டது. அவர்களுக்குப் பின் வேறு நபி எம்முகாந்திரத்தைக் கொண்டும் வரவேமாட்டார்களென்பதை ஸுன்னத்து ஜமா அத்து முஸ்லிம்கள் நன்கறிந்திருக்கின்றனர். ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தமது நுபுவ்வத்தை நீக்கப்பட்டு வருவாரென்று எமது திருமறையும்

ஹஜ்ரத் ஈஸா(அலை) அவர்கள் தமது நுபுவ்வத்தை நீக்கப் பட்டு வருவாரென்று எமது திருமறையும் ரஸூலே அரபி (ஸல்) அவர்களும் கூறவில்லை. ஸுன்னத்து ஜமா அத்தின ரிலும் எவரும் இவ்வாறு கொள்கையுடைய வராயுமில்லை. அவ்வாறுநீக்கப்பட்டு வரவேண்டுமென்கிற யாதொரு அவ சியமுங்கிடையாது. கடைசிகாலத்தில் உம்மத்தே முஹ ம்மது(ஸல்) அவர்களுக்கிடையில் நபி ஈஸா இறங்குவதால் அவர்களின் நுபுவ்வத்திற்கு யாதொரு ஹானியும் ஏற்படுவ தில்லை. அவர்களின் உம்மத்துகளுக்குக் கடைசி வரை அவர் நபியாகவேயிருப்பார் என்பது நிச்சயம். உதாரண மாக நமது இந்திய தேசத்து வைசிராய் "அதாவது இராஜ ப்பிரதிநிதி" ஸ்தானத்தை எடுத்துக்கொள்ளுங்கள். அவ் வப்போது நம்தேசத்திற்காக ஒவ்வொரு இராஜப்பிரதி நிதி வருகிறார்கள். தற்போது லார்டு ரீடிங்பிரபு இராஜப் பிரதிநிதியாக விருக்கிறார். இவரின் காலத்தில் லார்டு செம்ஸ்போர்டு பிரபு இந்தியாவிற்கு வந்தால் அவரைமாஜி இராஜப்பிரதிநிதியென்றே கூறுவோம். அவ்வாறு அவர் வந்தால் அவரை வைசிராய் பதவியை விட்டு நீக்கப்பட்ட வரென்று எந்த அறிஞனாவது கூறத்துணிவானா? இஃதே போல் உம்மத்தே முஹம்மது (ஸல்) அவர்கள் காலத்தில் ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்கள் வந்தால் அவரை மாஜி நபி யென்று கூற வோமேயன்றி நுபுவ்வத்தை விட்டு நீக்கப்பட்ட வரேன்று எவரும் கூறத்துணியார். ஆதலின், அவர் கடைசி காலத்தில் வானத்திலிருந்து இறங்கி வந்து ஷரீஅத்தே முஹம்மது (ஸல்) அவர்களைப்பின் பற்றி நடப்பார். அவர் தற்போது வானுலகில் உயிருடனிருக்கிறாரென்பதில் ஐய மில்லை இனி ஹஜ்ரத் ஈஸா அலை ஹிஸ்ஸலாமவர்கள் மரண மடைந்து விட்டாரா? அல்லது உயிருடன் வானுலகிலிருக்

கிறாரா? என்பதைப் பற்றி எமது முஹத்திஸாகள், முபஸ்ஸிரீன்கள், உலமாக்கள் எப்படி கூறுகின்றார்களென்பதை கவனியுங்கள்.

## முஹத்திஸாகள் (ரஹ்)

இப்னு ஹாதிம், இப்னு மர்தவிய்யா அப்தே இப்னு ஹமீது, ஸயீது இப்னு மன்ஸூர், திப்ரானி, (ரஹ்) இம்முஹத்திஸீன்கள் ஹஜ்ரத் இப்னு அப்பாஸ் (ரஸி) அவர்களால் "அவர் [ஈஸா அலை) கியாமத்தின் அடையாளமாயிருக்கிறார்" என்ற ஆயத்திற்கு, கியாமத்திற்கு முன் ஹஜ்ரத் ஈஸா (அலை) வெளிப்படுதல்" கியாமத்தின் அடையாளமாயிருக்கின்றதென்று வியாக்கியானம் செய்திருங்கிறார்கள். (துர்ரேமன்ஸூர் 6:20)

## முபஸ்ஸிரீன்கள் (ரஹ்)

ஈஸா (அலை) அவர்கள் மரண மின்றியே வானுலகிற்கு உயர்த்தப்பட்டார் (தப்ஸீர் அபீஸூஊது-ப-ஹாஷியாக பீர்பாகம் 1-பக்கம் 137) முஹம்மது தாஹிர் குஜராதி: ஈஸா (அலை) வானத்திலிருந் இறங்குவார் (மஜ்மவுல் பிஹார் பாகம் 1 பக்கம் 102)

காஜி நஸீருத்தீன் பைஸாவிரஹ்; தஜ்ஜால் வெளியாகும் போது ஈஸா [அலை) வானத்திலிருந்து வந்து அவனை சங்காரம் செய்வார். (தப்ஸீர்பைஸாவி பாகம் 2 பக்கம் 82)

அபுல் பரகாத் அப்துல்லாஹிப்னு அஹ் மதுஹனபி கடைசி காலத்தில் ஈஸா (அலை) வானத்திலிருந்து இறங்குவார்.

இமாம் ஸா (Z) ஹிதிரஹ்: அல்லாஹ் ஈஸா (அலை) வை உயிருடன் வானத்திற்கு உயர்த்திக்கொண்டான்.

காஜி ஷவ்கானி எமனி: ஈஸா (அலை) சரீரத்துடன் இறங்குவாரென்று ஹதீஸ்களில் வந்திருக்கிறது. (தப்ஸீர் பத்ஹுல் பயான் 1:157) நேயர்காள்! "சரீரத்துடன்" என்ற பதம் வந்திருப்பதை கவனிப்பீராக!

**சங்கை பெற்ற உலமாக்கள் கூறுவது;**

ஷேக் அப்துல் ஹக் முஹத்திஸ் திஹ்லவிரஹ்: அல்லாஹுத்த ஆலா ஈஸா (அலை) அவர்களை வானத்திற்கு உயர்த்திக்கொண்டான்.

அல்லாமாதீரிரஹ் ஹஜ்ரத் ஈஸா (அலை) பூமியின்மீதிறங்குவார். அவரின் தலையிலிருந்து நீர்த்துளிகள் விழுந்து கொண்டிருக்கும்.

ஷேக் முஹம்மது ரஹ்மதுல்லா முஹாஜிர்மக்கி: ஈஸா (அலை) அவர்களின் ஆன்மாவைச் சரீரத்துடன் உயர்த்தப்பட்டது எவரும் சரீரமின்றி ஆன்மாவை மட்டுமென்று எண்ணிக் கொள்ளவேண்டாம். இங்கு ஆன்மாவை மறுக்கப்படுகிறது.

தேவ்பந்து மத்ரஸா ஸ்தாபகர் மவ்லானா முஹம்மது காசிம் சாஹிப் இன்ஜீலின் ஹாபிஸ்: ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்கள் ஷியா, ஸுன்னிகளிடத்தில் நான்காவது வானத்தில் உயிருடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்களென்பது தான்.

(ஷேகுல்ந்ஹிது) மவ்லாஞு மஹ்மூதுல்ஹஸன் தேவ் பந்தி ரஹ்: ஈஸா (அலை) வானத்திலிருந்து இறங்கிய பின் தஜ்ஜாலைக்கொல்லுவார், ஷரீ அத்தே முஹம்மதியாவைக் கொண்டு கட்டளைகளிடுவார்.

மவ்லாஞு அப்துல் ஹைலக்னவி ரஹ்:-மரியமுடைய குமாரர் ஈஸா (அலை) கடைசி காலத்தில் வருவார். அவர் நபியாக விருக்கிற நிலையில் ஷரீ அத்தே முஹம்மதியாவை ப்பின் பற்றி நடப்பார். காரிஹாபிஸ் கலீலுர் ரஹ்மான் ஸாஹிப் ஸஹாரன்பூரி:-கியாமத்து (நாளை) க்கு சமீபத்தில் வானத்திலிருந்து இறங்கி வந்து ஹபீபேகுதா முஹம்மது ஸல்) அவர்களின் உம்மத்தில் சேருவார்.

ஹாரீஸ்பின் மக்ஷீ (ரஸி) அவர்களால் ஹாகிம் ரிவாய த்து செய்வதாவது:—(ஹஜ்ரத்) அலி (ரஸி) அவர்கள் ரம் ஸான்-மீ 21 தேதி காலையில் ஷஹீதாஞர்கள் குர் ஆன் இறக்கப்பட்டதும், ஈஸா (அலை) வானத்திற்கு உயர்த்தப் பட்டதும், மூஸா (அலை) வபாத்தான இரவில் ஹஜ்ரத் அலி (ரஸி) ஷஹீதாஞரென்று (ஹஜ்ரத்) அலி (ரஸி) அவ ர்களின் குமாரர் ஹஜ்ரத்)ஹஸன் (ரஸி) அவர்கள் சொல் லிக்கொண்டிருந்ததைக்கேட்டேன்.

ஷேக்ஷிஹாபுத்தீன் இப்னுஹஜர்ரஹ்:— வேதவியா க்கியானிகளும் ஹதிஸ்களும், ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர் கள் உயிருடன் இந்த (பஞ்சபூத) சரீரத்துடன் உயர்த்தப் பட்டுப்போஞர்"என்று ஏகோபித்து ஒப்புக்கொண்டிருக்கி ன்றனர்.

அல்லாமாகுஸ்தலானி: ஈஸா அலைஹிஸ்ஸலாம் வானத்திலிருந்து பூமிக்கிறங்கிவருவார்.

அல்லாமா முல்லா அலிகாரிரஹ்: ஈஸா (அலை) திமிஷ்குமஸ்ஜிதின்மினுரு மீது இறங்குவார்.

இமாம் அப்துல் வஹ்ஹாபு ஷெஅருனிரஹ்? ஈசா (அலை) சரீரத்துடன் வானத்திற்கு உயர்த்தப்பட்டது நிச்சயமே, இதன்படி உறுதிகொள்ளவேண்டியது வாஜிபு (கடமை)...... ஆனுல் அல்லாஹ்தன்னளவில் உயர்த்திக் கொண்டான்."

ஷாஹ்ரபீ உத்தீன்ஸாஹிப் திஹ்லவிரஹ், ஹஜ்ரத் ஈஸா அலை ஹிஸ்ஸலாம் அவர்கள் இருமலக்குகளின் தோளின்மீது சாய்ந்தவராக வானத்திலிருந்து திமிஷ்கின்ஜாமிஅமஸ்ஜிதுடைய கிழக்கு மினுருவின் மீதிறங்குவார்.

மவ்லானு அப்துல் ஹக்சாஹிப்ஹக்கானி: இரவில் மலக்குகள் ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்களை வானத்திற்கு கொண்டுபோனுர்கள் அவர் வானத்தில் உயிருடனிருக்கிருர்.

நவாப் குதுபுத்தீன் திஹ்லவி ரஹ்: ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்கள் வானத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது 33 வயதுடைய வராயிருந்தார்.

சரித்திராசிரியர் காதிம் அலிபாருகி ரஹ்: ஹபூத் ஆதம் (அலை) (கணக்கின் படி) 5617 ம் வருஷத்தில் ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்கள் வனத்திற்கு உயர்த்தப்பட்டார்.

சரித்திராசிரியர் இப்னு குல்தூன் நிச்சயமாக மஹ்தி (அலை)கடைசி காலத்தில் வெளிப்படுவார். அவருக்குப் பின் தொழுபவர்களில் ஈஸா (அலை) அவர்களும் ஒருவராவர்.

அபுல் காசிம் அந்தலிஸி: ஈஸா (அலை) வானத்தில் உயிருடனிருக்கிறரென்பதில் சந்தேகமில்லை. (ஹயாதேமஸீஹ)

மேலே நாம் வரைந்துள்ள ஆயத்து, ஹதீஸ் முதலியவைகளால் ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்கள் உயிருடன் ஜீவித்துக்கொண்டிருக்கின்றூர்களென்றும் கடைசி காலத்தில் நிச்சயமாய் வருவார்களென்றும் நன்கு தெரிந்துகொள்ளலாம். நிற்க, மிர்ஸாயிகோஷ்டியினர் ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்கள் உண்ணவும், குடிக்கவுமில்லாமலும் மேலும் மனிதனுக்கு அவசியமானவைகளில்லாமல் வானுலகில் உயிருடன் ஜீவித்துக்கொண்டிருக்க முடியாதென்று கூறுகின்றனர். இஃது மிகவும் ஆச்சரியப்படத்தக்கதாயிருக்கிறது. இறைவன் ஸர்வசக்தியுள்ளவனென்பதை அவர்கள் அறியவேண்டும். இறைவன் ஸர்வசக்தியுடையவனென்று எந்த மனிதன் உறுதியான நம்பிக்கையுடயவனுயிருக்கின்றூனே! அவன் இவ்வாறு சந்தேகம் கொள்ளவேமாட்டான் இளகிய வெள்ளை நிறமான ஓர் சிறு துளியிலிருந்து மனிதனைப் பலதிரப்பட்ட அவயவங்களை ஒன்றூடொன்று பொருத்திஉயிரையளித்து மானிடனுகப்படைக்கவில்லையா? கேட்ட, பார்க்க, பேச, நடக்கக்கூடிய சக்தியைக் கொடுக்கவில்லையா? இவ்வொரு விஷயத்தை மட்டும் சற்று ஆழ்ந்து கவனித்துப் பார்ப்பார்களாயின் இறைவனின் மகாப் பெரிய சக்தி நன்கு புலனுகும். இவ்வுலகின்கண் காணப்படும் சிருஷ்டிப் பொருள்களின் அனுப்பிரமாணமான ஒவ்

வொரு வஸ்துவும் ஏகபராபரனின் ஒப்புயர்வற்ற மகாப் பெரிய ஸக்தியை விளக்கிக் காட்டக் கூடியனவைகளாயிருக்கின்றன. சொற்ப அறிவு படைத்த மானிடனுக்கு, தன் அறிவிற்குள் இறைவனின் குத்ரத் அடங்கிவிட வேண்டுமென்று கருதுவானாயின் அஃது ஒரு போதும் முடியாது பகற்கனவாகவே முடியும். அ வ ற் று ள் அமையத்தான் வேண்டுமென்கிற கட்டாயமொன்று மில்லை. "உங்களுக்கு செற்ப அறிவு தான் கொடுக்கப்பட்ட"தென்று குர்ஆன் ஷரீபு கூறுகிறது. கேவலம் சொற்ப அறிவுள்ள மானிட ஜென்மங்களுக்குள்ளும் ஒன்றுக்கொன்று அறிவில் குறைவாயும் அதிகமானவராயு மிருக்கின்றனரே யன்றி எல்லோரும் சமமாயில்லை. இந்நிலையிலுள்ள மானிடனால் ஆச்சரியப்படும்படியான பெரிய பெரிய வேலைகளெல்லாம் செய்யப்படுகிறது. உதாரணமாக, பண்டை காலத்தில் ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குப்போக வேண்டுமானால் ஏறுவாகனங்களிலும், கட்டை வண்டிகளிலும் சென்று கொண்டிருந்தனர். கடல் மார்க்கமாய்ப் பாய் மரக்கப்பல்களில் சென்று கொண்டிருந்தனர். ஆனால் தற்பொழுதோ, ரயில் வண்டிகளிலும், கடலில் நீராவிக்கப்பல்களிலும் செல்லுகிறார்கள். இன்னும் அக்காலத்தில் வாள்களாலும், அம்புகளாலும் யுத்தம் நடந்து வந்தது; ஆனால், இக்காலத்திலோ துப்பாக்கி, பீரங்கி வெடிகுண்டு, கியாஸ் குண்டு, டார்பிடோ, டெஸ்ட்ராயர், ஆகாயவிமானம், ஸப்மரீன் முதலியவைகளைக் கொண்டு யுத்தம் செய்கின்றனர். நூற்றுக்கணக்கான மைல்களுக் கப்பாலுள்ளவர்களுடன் நிமிஷக்கணக்கில் தந்தியின் மூலமாய் பேசிக்கொள்ளப்படுகிறது. இத்தந்தியில் கம்பியில்லாத் தந்தியும் நடைபெறுகிறது. டெலிபோன் மூலியமாய் நேருக்கு நேர்நின்று

பேசுவதைப்போல் பேசப்பட்டு வருகிறது மின்சார சக்தியில் விளக்கும் எரிக்கப்பட்டு வருகிறது. இன்னும் பல உள. இவைகளெல்லாம் சொற்ப அறிவு படைத்த மனிதனின் வேலைத்திறமை யன்றோ? எல்லோரையும் எல்லா வஸ்துக்களையும் படைத்த ஸர்வ சக்தியுடைய சிருஷ்டி கர்த்தாவாகிய ஏக பராபரனுக்கு ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்களை உயிருடன் உண்ணவும்: குடிக்கவும், மலம், ஜலமில்லாமலும் வானுலகில் வைத்திருப்பது முடியாதா? வென்பதை ஏன் அந்த மிர்ஸாயிகள் அறியவில்லை! மனிதன் எவ்வளவு திறமை வாய்ந்தவனுயிருப்பினும் சரீரத்திலுள்ள உரோமங்களில் ஓர் உரோமம் உதிர்ந்து போய்விட்டால் அவ்வுரோமத்தைப் பழையபடி அதே இடத்தில் அமைக்கக்கூடிய சக்தியுண்டோ? நிற்க, "அஸ்ஹாபுல்கஹப்" என்பவர்கள் ஓர் குகையினுள் இன்னும் உயிருடனிருக்கிறார்களென்பதை உலகம் நன்கறியும். இவர்களைப் பற்றிய விஷயங்கள் எமது மாசற்ற திருமறையின் ஸூரேகஹப் என்னும் அத்தியாயத்தில் விரிவாய்க் காணப்படுகின்றன. அவர்களைப்பற்றி சற்று விரிவாய் ஈண்டு எழுதப்படுவதால் சகோதரர்கள் அவர்களின் விஷயத்தைச் சற்று ஊன்றிப் படித்துப் பார்ப்பார்களாக.

ரூம் தேசத்தின் தகியானூஸ் என்னும் அரசன் அஸ்ஹாபுல்கஹ்பு என்பவர்களை தன் விக்ரஹாராதனை மதத்தைத்தழுவும்படியாய் வற்புறுத்தினன். அவர்களோ ஏகத்துவக் கொள்கையுடையவர்களாயிருந்ததினுல் விக்ரஹ ஆராதன மதத்தைத்தழுவமறுத்துவிட்டார்கள். அவர்கள் மறுத்ததை "ஸூரே கஹ்பில்" கூறப்பட்டுள்ளதைப்பாருங்கள் "வானத்தையும் பூமியையும்படைத்த ஆண்டவனே

எங்கள் ஆண்டவன். அவனையன்றி வேறு ஆண்டவனை நாம் கூப்பிடவே மாட்டோம்" என்று சொல்லிவிடவே அவ்வரசன் தவணை கொடுத்து நன்குயோசித்து தனது மதத்தைத்தழுவிக் கொள்ளவேண்டுமென்றும் இல்லாவிடில் கொன்று விடுவதாகச்சொன்னான். அத்தவணைக்குள் அஸ்ஹாபுல்கஹ்பு என்பவர்கள் ஓர்நாயுடன் மலைக்குகையில் மறைந்து கொண்டனர். "அவ்வாலிபர்கள் குகையினுள் போய்அடைக்கலமானபோது" எங்கள்இறைவனே எங்களுக்குஉனது ரஹ்மத்தையும் இன்னும் எங்கள் காரியத்தில் நீ, நேர்வழியை ஆயத்தப்படுத்துவாயாக!" "(ஸூரேகஹப்) என்றனர். அவர்களின் இவ்வேண்டுகோளின்படி "தகியானூஸ்" அரசனை விட்டும் காப்பாற்றி காரிய சித்தியாக்கிவைத்து இறைவன் தனது குத்ரத்தைஅவர்களும் மற்றோரும் அறிந்துகொள்ளும்பொருட்டு முன்னூற்றியொன்பது(309) வருடங்களுக்குப்பின் அவர்களைத்தூக்கத்திலிருந்துஎழுப்பினான். பின்பு அவர்களைஎழுப்பினோம்" (கஹ்ப்) "அவர்கள் அவர்களின்குகையில் முன்னூறுவருடங்களுக்கு மேற்கொண்டுஒன்பது வருடங்கள் இருந்தனர். [ஸூரேகஹப்)இவ்வாயத்தில் 300 வருடம் தனியாகவும் 9 வருடம் தனியாகவும் கூறப்பட்டதின் காரணம். அஸ்ஹா புல்கஹ்புகளின் காலத்தில் வருடக் கணக்கு சூரியக் கணக்கின்படி இருந்ததால் 300 வருடமென்றும், அவர்களின் விஷயங்கள் எமது நபி பெருமானார் (ஸல்)அவர்களுக்கு அறிவிக்கப் பட்டதாலும் அரபிகளிடத்தில் சந்திரக் கணக்காயிருப்பதாலும் சூரியக் கணக்கு நூறு வருஷத்திற்கு சந்திரக் கணக்கு நூற்றிமூன்று வருடங்களாகின்றன. ஆதலின் 300 வருடங்களுக்கு சந்திரக் கணக்கின்படி 309 வருடங்களாகின்றன. அவர்கள் எழுந்து அவர்களுள் ஒருவரை உணவுப்

பொருள் கொண்டுவர அனுப்பினார்கள். பின் அவரும் வந்து மறுபடியும் அக்குகையினுள் சென்று விட்டார். தற்போது அக்குகையில் அவர்கள் தூங்கிய வண்ணமாயிருக்கின்றனர். அருமை முஸ்லிம் சகோதரர்காள்! மேற்கூறிய விஷயத்தைச் சற்று சிந்தித்துப் பாருங்கள். குகையினுள் அஸ்ஹா புல்கஹ்பு என்பாரை உணவும், குடிப்பும், மலம், ஜலமில்லாமல் வைத்திருக்க வில்லையா? இவ்வாறிருக்க ஹஜ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வானுலகிலிருப்பது ஆச்சரியமா? ஸர்வ சக்தியுள்ள இறைவனுக்கு இஃதோர் பெரிய கஷ்டமான காரியமல்ல. தவிர, கல்லிற்குள் "தேரை" யிருக்கின்றதென்பது உலகமறியக் கிடக்கின்றது. அத்தேரையும் உயிருள்ள ஜெந்து தானே? அதற்கும் உணவு, தண்ணீர், காற்று, மலம், ஜலம் அவசியமன்றோ? ஆகாரம், தண்ணர், எவர் கொடுக்கின்றனர்? மலம், ஜலம் எவ்வாறு கழிக்கும்.? கெற்பத்திலுள்ள சிசுவுக்கு மலம், ஜலம் எது? மிர்ஸாயி கோஷ்டியினர் இவற்றை சற்று உற்று நோக்குவார்களாக. சகோதரர்காள்! நாம் இதுவரை கூறி வந்த விஷயங்களை கவனித்து படித்து வருவீர்களாயின், நிச்சயமாய் ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்கள் உயிருடன் உயர்த்தப்பட்டுள்ளாரென்றும், கடைசி காலத்தில் அவசியம் வானுலகிலிருந்து இறங்கி வருவார்களென்றும் நன்கு தெரிந்து கொள்ளலாம்.

## இயேசும் ஈஸா நபியும் ஒருவரே.

தாருல் இஸ்லாமைப்பற்றி எமது முஸ்லிம் சகோதரர்கள் நன்கறிந்திருக்கின்றனர். ஆதலின் நாம், எமது சகோதரர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கவேண்டிய அவசிய

யில்லை. இதன் நூதன பிரசாரம் மிகவும் விந்தையாயிருக்கிறது. இது புது வர்ணங்களுடையனவாயிருக்கின்றன. உண்மையை ஆராச்சி செய்து உணருவது இதன் ஆசிரியரின் கடமையல்ல போலும்! இவர் எவ்வாறு கூறினும் கூறுக. உண்மை உலகமறியக்கிடக்கின்றது. இவரின் ஆதாரமற்ற வீண் கூற்றுகளை உலகமக்கள் ஏற்றுக்கொள்ள தயாராயில்லை என்பதை அவர் அறியகடவர். இவர் தனது தாருல் இஸ்லாம் 1925-வது ஜுலை-மீ இதழில் ஆதாரமற்ற நூதன ஓர் விஷயத்தைக் கிளப்பிவிட்டிருக்கிறார். அவ்விஷயம் ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்கள் விஷயத்திற்குச்சம்பந்தப்பட்டிருப்பதாலும் அதற்கு தக்கமறுப்பு எழுதி இந்நூலுடன், முஸ்லிம் சகோதரர்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு சேர்க்கவேண்டியதாயிருக்கின்றது. அதாவது;— மேல்கூறிய ஜுலைமாத இதழின் கலம் பகத்தில் "மீண்டும் எமது கொள்கை என்னும் தலைப்பின் கீழ்" முன்ஜீவித்திருந்த இஸ்ரவேல் கூட்டத்தின் இயேசுவானவர் இறந்துவிட்டாரென்பதே எமது துணிபு; எனவே நம்நபிகள் நாயகத்தின் திருவசனத்தில் காணப்படும். "மரியத்தின் மகனின் வருகை" யானது அந்த இறந்து போன ஈஸா நபி (அலை) அவர்களின் வருகையன்றென்பதும் எமது கோள்கையாகும்" எனகாணப்படுகின்கிறது. இவரின் துணிபே துணிபு! ஆராய்ச்சியே ஆராய்ச்சி! மிர்ஸாயி கோஷ்டியினர் நபியல்லாதாருக்கும் வஹீ வருமென்று கூறுவதைப்போல் தாருல் இஸ்லாம் ஆசிரியர் ஜனாப். தாவுத்ஷாவும் கூறுகிறார். அதாவது: 1925-வது ஜனவரி-மீ தாருல் இஸ்லாம் சஞ்சிகையின் தலையங்கத்தில் 12-வது வினாவிற்கு விடையாக "குர் ஆன் ஷரீபுக்குப் பின்னே மற்றொரு வேதமும், நபிகள் நாயகத்துக்குப் பின்னே

வேறொரு நபியும் நமக்கு அவசியமில்லா மற்போயினும் ஆண்டவன் மட்டும் தனக்குப் பிரியமான நல்லடியார்களுடன் எப்பொழுதும் சம்பாஷித்துக் கொண்டேயிருப்பான். ஏனெனில் நல்லடியார்களுடன் சம்பாஷிப்பதென்பது நாயகனுடைய ஒரு சிறந்த குணமாயிருந்து வருகிறது." என்று காணப்படுகிறது. இக்கூற்றிற்கு மறுப்பு இந்நூலின் வஹீபுடைய அத்தியாயத்தில் வரையப்பட்டுள்ளதே போதுமானதாயிருப்பதால் ஈண்டு ஏசுவும் ஈஸா (அலை)வும் ஒருவர்தானா? அல்லவா? என்பதை ஆராய்ச்சி செய்வோம். பனீ இஸ்ராயீல் என்பது இஸ்ரவேலென்றும் ஈஸா (அலை) என்பதை இயேசு வென்று வழங்கப்பட்டு வருவதை உலகமே அறியக் கிடக்கின்றது. ஆதலின், அந்த இஸ்ரவேல் கூட்டத்தினருக்கு கடைசியாக வந்த நபி, நாயகத்திருமொழியில் கூறப்பட்டுள்ள மரியம் (அலை) அவர்களின் குமாரர் ஈஸா (அலை) அவர்களே தான் என்பது வெளிப்படை. இதற்கு ஆதாரமாக இதோ இறைவன் அருளியுள்ளதை உற்றுக் கவனிப்பீர்களாக.

"இன்னும் எபனீ இஸ்ராயீல் (இஸ்ரவேல்)களே! எனக்கும், உங்களுக்கும் இறைவனாகிய (ஏக) பராபரனை வணங்குங்கள் என்று மஸீஹ் (ஈஸா அலை) சொன்னார்." (குர் ஆன் ஸூரே மாயிதா) "மரியமுடைய குமாரர் ஈஸா (அலை) அவர்கள் (பனீ இஸ்ராயீல் கூட்டத்தினரை நோக்கி) எபனீ இஸ்ராயீல் (இஷரவேல்)களே! நிச்சயமாக நான், உங்களளவில் அல்லாஹ்வினின்றும் ரஸூலாக வந்திருக்கிறேன்." என்று சொன்னார். (குர் ஆன் ஸூரேஸப்) இதைப்போல் இன்னுமநேக ஆதாரங்கள் குர் ஆன் ஷரீபில் காணப்படுகின்றன. ஸூரேஸப்பின் இறுதியில் "பனீ இஸ்ராயீல்களினின்றும்

ஒரு சாரர் நபி ஈஸா (அலை) அவர்களைக்கொண்டு ஈமான் கொண்டதாயும், ஒரு சாரார் ஈமான் கொள்ளாமல் நிராகரித்தனரென்று" மிகத்தெளிவாய்க் காணப்படுகின்றது. மேலேகூறியுள்ள இறைவனது திருவசனத்தைக் கவனிப்போருக்கு இஸ்ரவேல் கூட்டத்தவர்க்கு நபியாகவிருந்த அந்த இயேசுவாகிய ஈஸா (அலை) அவர்களே தாமென்பதை சந்தேகமின்றி அறிந்துக்கொள்ளலாம். தாருல் இஸ்லாம் ஆசிரியரின் ஆதாரமற்ற கூற்றுனது "பூனை தன்கண்களை மூடிக்கொண்டு உலகமே இருண்டுவிட்டதாக" கருதியதைப்போலிருக்கின்றது. இனி இயேசுவென்ற பெயரைக்கவனிப்போம். இயேசு என்ற பெயர் "ஏஷூ" (வு) என்ற பெயரிலிருந்து எடுக்கப்பட்டதாயிருக்கிறது. "ஏஷூ" என்பது அப்ரானி பாஷையில் "ஸையத்" என்றும் "பேரியார்" என்றும் பொருள்படும். அரபியர்கள் இதை மாறுதல் செய்து அரபியில் ஈஸா வென்று மாற்றினார்கள். குர்ஆன் ஷரீபு அரபி பாஷையாயிருப்பதால் அதிலும் ஈஸா வென்றே கூறப்பட்டிருக்கிறது. இன்ஜீல் அப்ரானி பாஷையாயிருப்பதால் அதில் "ஏஷூ" வென்றே கூறப்பட்டிருக்கிறது. தற்போது கிறிஸ்துவ நண்பர்கள் "ஏஷூ" வென்பதை "ஏசு" வென்று வழங்குகின்றனர். தமிழில் ',ஏ" யென்ற மெய்யெழுத்துக்கு முன் உயிரெழுத்து வரவேண்டியது அவசியமாயிருப்பதால் உயிரெழுத்தைச் சேர்த்து "இயேசு" வென்று வழங்கப்பட்டு வருகிறது. (இவ்விஷயத்தை தாபிவுஷ்ஷூபஹாத்......35 பக்கம் பார்க்க.) முஸ்லிம் சகோதரர்காள்! மேலே வரையப்பட்டுள்ள விஷயங்களை நன்கு உற்று நோக்குவீர்களாயின், இஸ்ரவேல் கூட்டத்தினரென்று கூறப்படும் பனீ இஸ்ராயீல் கூட்டத்தினருக்கு, இயேசுவென்று வழங்கப்படும்படியான

நாயகத்திருமொழியில் காணப்படும் மரியம் (அலை) அவர் களின் குமாரர் ஈஸா (அலை) அவர்களே நபியாக விருந்தா ரென்றும்; இயேசு, ஈஸா (அலை) வென்பது ஒருவரேயன்றி இருவரல்ல, அந்த இயேசுவாகிய ஈஸா (அலை) அவர்களே நபிகள் பிரான் (ஸல்) அவர்கள் கூறியுள்ளபடி கடைசி கால த்தில் வானத்திலிருந்து இறங்கிவருவார்களென்பது மிகத் தெளிவாய் அறியக்கிடக்கின்றது. உண்மையை மறைக்க எவரால் முடியும்? உலகமே ஒன்று கூடி முயர்ச்சித்தாலும் மறைக்கமுடியாது. உண்மையே நிலை த்து நிற்கும் ஆபாசபொய்யோ ஒரு விநாடியும் நில்லாது. அந்தோ பரிதாபம்! முன்பின் யோசியாமலும் உண்மை யை உணராமலும் தெரிந்தோரிடமாவது கேட்டுத் தெரிந் துக் கொள்ளாமலும் தவறான விஷயங்களை வரைந்து விடு வதில் யாதுபயன்? தவறான விஷயங்களை கூறுவதாலும், பிரசாரம் செய்வதாலும் அதை உலகமக்கள் ஏற்றுக் கொ ள்வார்களா? உண்மையை உணரக்கூடியமகான்களும், உண ர்த்தக்கூடிய நிபுணர்களுமில்லாமல் போய்விடவில்லை. மிர் ஸா குலாம் அஹமது காதியானி, ஹஜ்ரத் நபி ஈஸா (அலை) அவர்களை நிந்தித்தும், அவமதிப்பாயும் வரைந்துள்ளதை ஸுன்னத்துஜமா ஆத்தினர் எடுத்துக் காண்பிக்கும்போது அந்த மிர்ஸாயி கோஷ்டியினர் மறு மொழி கூற வழி யின்றி இல்லை இல்லை "எங்கள் மிர்ஸா ஈஸா (அலை) அவர் களை அவ்வாறு கூறவில்லை இயேசுவையே கூறினாரென்கி றார்கள். (இவ்விஷயத்தை தாபிவுஷ்ஷுஹபஹாத் .......35 பக்கம் பார்க்க.) ஆதலின், தாருல் இஸ்லாம் ஆசிரியர் கூறுவது புதிதல்ல. எவ்வாறு கூறினும், கூறுக. உண் மையை மறைக்க முடியாது. சத்தியமே ஜெயம் பெறும்.

உண்மையானது செயற்கைச் சட்டங்களால் மறையாது. காகித புஷ்பங்களில் நறு மணமும் கமழாது. (உர்து கவி.)

ஆதலின், இயேசு வென்பதும் மரியம் (அலே) அவர்களின் குமாரர் ஈஸா (அலே) வென்பதும் ஒருவரே யென்பது திண்ணம்.

## மஹ்தி (அலே.)

மஹ்தி அலேஹிஸ்ஸாம் அவர்கள் விஷயமாய் முஹம்மதலி சாஹிபு பின் வருமாறு கூறுகிறார்:—"ஹஜ்ரத் மிர்ஸா ஸாஹிபு தான் முஜத்திதுதான் என்று கூறினார்கள். ஆனால், இத்துடன் அல்லாஹுத்த அலா இதே முஜத்திதில் ஈஸா (அலே) அவர்களின் தத்துவம் வெளியாயிருப்பதாயும், அவரே மஹ்தி என்றும் காண்பித்தான்." (த. அ. பக்கம் 21)

மிர்ஸா ஸாஹிபு தான், முஜத்தித் தான் என்று பொய் கூறுகிறார். மிர்ஸா தான் நபி யென்றும் வஹீ வருகிறதென்றும் பலவாறாய் வாய் கூசாமல் கூறியுள்ளார். அலி ஸாஹிபே தமது குரு கடைசியாக எழுதிய ஹகீகதுல் வஹீ என்னும் நூலில் தனக்கு இறைவனால் மஜாஸி நபி யென்ற நாமத்தை யளித்தாக எழுதியுள்ளாரென்று; தஅவீதே அமல் 25 பக்கத்தில் கூறுகிறார். இன்னும் தமது புஸ்தகத்தில் "மிர்ஸா ஸாஹிபு இறைவனால் கேட்டாரென்றும்" "தெரிந்துக் கொண்டாரென்றும்" கூறுகிறார். அவரின் சொல்லே முன்னுப்க்குபின் முறண்படுவதை நேயர்கள் கவனிப்பார்களாக. மிர்ஸா ஸாஹிபு ஈஸா (அலே) அவர்களின் தத்துவமுடையவர் என்று அலி ஸாஹி

பு கூறுவதை நாம் மேலேமறுப்பு எழுதியிருக்கிறோம். ஈண்டு மிர்ஸா மஹ்தியா என்பதை கவனிப்போம். மிர்ஸா ஸாஹிபின் சொல், செயல்களோடு இஸ்லாத்தின் மாசற்ற கொள்கைகளுக்கு முற்றும் விரோதமாயிருக்கிறது. போதாக்குறைக்கு அவரே ஈஸா, மஹ்தி முஜத்தித் என்று கூறுகிறார். சொற்ப அறிவு படைத்தவனும்-பள்ளி மாணவரேனும்-ஏற்றுக்கொள்வரா? ஆதலின் மிர்ஸா ஸாஹிபு எக்காரணம்பற்றியும் எம்முகாந்திரத்தைக்கொண் டும் மஹ்தியும் ஆகவேமாட்டாரென்பது திண்ணம். இத ற்கு கீழ்வரும் நாயகத்திருமொழிகளே தக்கசான்றுகளா யிருக்கின்றன.

1. எனது அஹ்லபைத்திலிருந்து அல்லாஹுதஆலா ஒருவரை அனுப்புவான் அவரின் பெயர் என்பெயரை யும், அவரின் பிதாவின் பெயர் என் பிதாவின் பெயரை ஒத்திருக்கும். (ராவி அப்துல்லாஹிப்னு மஸ்வூது ரலி.)

2. மஹ்தி (அலை) எண்ணில் நின்றுமாயிருக்கிறார். அகலமான நெற்றியும், உயர்ந்த நீளமான மூக்கையுடைய வராயிருப்பார். பூமியில் அநியாயம் நிறம்பியிருப்பதற்கு பதிலாய் அவர் நீதத்தை நிறப்புவார். எழு வருடம் ஆட்சி செலுத்துவார். (ராவி அபீஸயீதில் குத்ரி) 3 மஹ்தி (அலை) அவர்களிடம் ஒரு மனிதன் வருவார் வந்து மஹ் தியே எனக்கு (ஏதாவது) கொடுங்கள்; கொடுங்களென்று கேட்பார் அவர் சுமக்கும் அளவு (பொருளை) வரி போடு வார். (ராவி அபீஸயீதில் குத்தி) சகோதரர்காள்? இத் திருமொழிகளின்படி, மஹ்தி (அலை) அவர்கள் கடைசி காலத்தில் வருவாறேயன்றி அவரின் தத்துவம் அமையப்

பெற்றவருகாரென்பது நன்கு புலனாகும். அவர்களின் வர்ணிப்பும் இத்திருமொழிகளில் காணப்படுவதுடன் அவரின் திருநாமமும் அவரின் பிதாவின் திருநாமமும் எமது நபிகள் பெருமான் அவர்களின் திருநாமத்தையும், அவர்களின் பிதாவின் திருநாமத்தையும் ஒத்திருக்குமென்று நன்கறியலாம். அதாவது மஹ்தியின் பெயர் முஹம்மது என்றும் பிதாவின் பெயர் அப்துல்லாவென்றும், பாதிமி வம்சத்தைச்சேர்ந்த வருகவுமிருப்பார். ஆனால், மிர்ஸா ஸாஹிபின் பெயரோ மிர்ஸா குலாம் அஹமது (காதியானி) அவரின் பிதாவின் பெயர் மிர்ஸாகுலாம் முர்துஜா வம்சம் முகல். மஹ்தி மக்காவில் தோன்றுவார் மிர்ஸாவோ பஞ்சால நாட்டிலுள்ள காதியான் என்னும் ஊரில் பிறந்தார். மஹ்தி (அலை) அவர்கள் காலத்தில் உலக முழுவதும் நியாயம் பறவியிருக்கும். அவர் எமது மாசற்ற ஷரீ அத்தைப்பின்பற்றி நடப்பார். இக்காலத்திலோ அநியாயமேமிகைத்திருக்கிறது. மிர்ஸா சாஹிபோ ஷரீ அத்திற்கு விரோதமாய் குர் ஆன் ஹதீஸுகளுக்கு விரோதமான வியாக்கியானம் செய்கிறார். தனக்கு வஹீ வருகிறதென்கிறார். தானே ஈஸா, மஹ்தி, முஜத்திதென்கிறார். இறைவனிடம் கையொப்பம் வாங்கினேனென்கிறார். (நவூஸுபில்லாஹி மின்ஹா) இவைகளன்றி இன்னுமனேக குபிரான விஷயங்களைக் கூசாமல் கூறியுள்ளார். இவற்றையெல்லாம் உற்று நோக்கும்போது எவரேனும் மிர்ஸா ஸாஹிபை ஈஸா, மஹ்தி, முஜத்திதென்று கூறமுன் வருவாரா? இவ்விஷயங்களுக்கும் மிர்ஸா ஸாஹிபுக்கும் என்ன சம்பந்தமிருக்கிறது? ஒன்றுமே கிடையாது. ஆதலின், ஒருக்காலும் மிர்ஸா ஸாஹிபு மஹ்தியும் ஆகவேமாட்டார்

என்பது திண்ணம். மற்றொரு இடத்தில் அலி ஸாஹிபு கூறுவதைப் பாருங்கள். "முஸ்லிம்கள், மஸீஹ் (ஈஸா அலை) இறங்கும்போது, மஹ்தியும் வெளிப்படுவார், இருவரும் சேர்ந்து குப்பார்களுடன் யுத்தம் செய்வார்கள்; எந்த மனிதன் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளவில்லையோ அவனை கொல்லுவார்கள் என்ற நம்பிக்கைக் கொண்டிருக்கின்றனர். இஃது "மதத்தில் பலவந்தம் வேண்டாம்" என்ற குர் ஆனின் ஆயத்திற்கு விரோதமாயிருக்கிறதென்று த-அ-17-ம் பக்கத்தில் கூறுகிறார்.

அலி ஸாஹிபு கூறுவது முற்றும் தவறாகும். குர் ஆனின் 6666 ஆயத்துகளின் மீது ஸுன்னத்து ஜமா அத்து முஸ்லிம்களாகிய நாம் ஈமான் கொண்டுள்ளோம். அதன்படியே நடந்து வருகிறோம். மிர்ஸாயி கோஷ்டியினரைப்போல் நாம், குர் ஆன், ஹதீஸுகளுக்கு நூதன பொருளும் மனம்போனபடி நூதன வியாக்கியானங்களும் செய்வதில்லை. எங்களைப்போலவே ஈஸா மஹ்தி (அலை) அவர்களும் நடந்து வருவார்கள். ஆதலின், எமது மாசற்ற திருமறை "மதத்தில் பலவந்தம் வேண்டாமென்று" கூறும்போது அவ்வேதத்தைப்பின் பற்றி நடக்கும் நாம் எவ்வாறு பலவந்தப்படுத்துவோம்? மஹ்தி (அலை) அவர்களும் பலவந்தப்படுத்தவே மாட்டார்கள். பலவந்தப்படுத்துவாரென்றும் இஸ்லாத்தை தழுவாதவனை கொல்லுவாரென்றும் எந்த முஸ்லிமும் நம்பிக்கைக் கொண்டவனுமில்லை. பிற்காலத்தில் குப்பார்கள் இஸ்லாத்திற்கு இன்னல்களை விளைவிப்பார்களென்று இஸ்லாமிய அரசருடன் போர் துவக்குவார்களென்று அதுகாலை தற்காப்பிற்காக அவர்களுடன் எதிர்த்துப்போர் புரிந்து வெற்றிப் பெறு

வார். உலகில் அநியாயததைப் போக்கி நியாயத்தை நிலை நிறுத்துவார். இது முஸ்லிம்களின் நம்பிக்கையாகும். அலி சாஹிபு எவ்வாறு கூறினும் கூறட்டும். அவரின் கூற்றை ஒப்புக்கொள்பவர் யார்? ஆதலின், நாம் மேலே வரைந்துள்ளபடி ஹஜ்ரத் இமாம் மஹ்தி பின்னால் வெளிப்படுவார். ஒருக்காலும் மிர்ஸா சாஹிபு மஹ்தியுமாகமாட்டாரென்பது திண்ணம்.

## முஜத்திது.

அல்லாஹுத்த ஆலா ஒவ்வொரு நூற்றாண்டின் தலைப்பிலும் தன் மார்க்கத்தைச் சீர்திருத்தும்படியான (முஜத்திது) ஒருவரை அனுப்புவான். (நாயகத்திரு மொழி) (த்அவதே அமல் 7)

இந்த மொழியின்படி சரியாய் 14-வது நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஹஜ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி அவர்கள் தன்னை இறைவன் 14-வது நூற்றாண்டிற்காக முஜத்திதாய் அனுப்பியதாக தாவாச்செய்தார். (த-அ-பக்கம் 8)

முஹம்மதலி ஸாஹிபு முஜத்திது எத்தன்மைவாய்ந்தவராயிருக்கவேண்டுமென்பதை கவனிக்கவில்லை போலும்! முஜத்திது எப்படிப்பட்டவராயிருக்கவேண்டுமென்பதை மஜாலி ஸுல்அப்ரார் என்னும் நூலிலிருந்து மொழி பெயர்த்துத்தருகிறேன் கவனியுங்கள். 'அல்லாஹுத்த ஆலா ஒவ்வொரு நூற்றாண்டின் தலைப்பிலும் தன் மார்க்க சீர்திருத்தக்காரரான (முஜத்திது) ஒருவரை அனுப்புவான் (ஹதீஸ் ராவி ஹஜ்ரத் அபூஹுரைரா ரலி)

ஒவ்வொரு நூற்றாண்டின் தலைப்பில் என்பதன் கரு த்து ஹிஜ்ரி கணக்கின் ஆரம்பத்தைக் கொண்டாயிருக்கி றது. மார்க்கத்தை சீர்திருத்துவதின் கருத்து கிதாப் (குர் ஆன்) ஸுன்னத் (ஹதீஸ்) களின்படி அனுஷ்டானங்கள் இல்லாமலிருப்பதற்கு (மீண்டும்) புத்துயிரளித்து அவைக ளின்படி ஏவுவதற்காகும். ஏனெனில் முஜத்தித் நூற் றாண்டின் தலைப்பில் வந்தவராயிருக்கிறார். (அவர்) கல்வி மேன்மை இவைகளால் பிரபல்யமானவராயும் மார்க்கத்தில் (மத அனுஷ்டானங்களை ஜனங்கள் கைக்கொண்டொழுக) தூண்டக்கூடியவராயு" மிருக்கவேண்டுமென்றும் இன்னு அதே நூலில் "மார்க்கத்தின் அந்தரங்க பஹிரங்ககலைகளை நன்கறிந்தவராகவும் ஸுன்னத்திற்கு (ஸுன்னதே ரஸூ லுக்கு) உதவி செய்பவராகவும் பித்அத்தை (நூதன அனு ஷ்டானங்களை) கண்டித்து நீக்கச்செய்பவராகவும் இருக்க வேண்டும்" என்றும் கூறப்பட்டுள்ளது. (மஜாலிஸுல் அப்ரார் பக்கம் 486)

சகோதரர்காள்! மேலே கூறப்பட்டுள்ள விஷயங்க ளால் முஜத்திதின் தன்மை, அந்தஸ்து; பெருமை முதலி யன மிகத்தெளிவாய்த் தெரிந்துக்கொள்ளலாம். இவற்றை கவனிக்கும்போது மிர்ஸா ஸாஹிபு 1 மார்க்கத்தை சீர்திரு த்தினாரா? 2 குர் ஆன் ஹதீஸுகளின் கட்டளைப்படி நடக்க ஜனங்களை ஏவினாரா? 3 பஹிரங்க அந்தரங்கக்கலைஞ் ஞானங்க ளில் தேர்ச்சிபெற்றவராயிருந்தாரா? 4 தன் சகோதர உல மாக்களிடத்தில் கல்வியில் தேர்ந்தவரென்றகீர்த்தியும் மதி ப்பு பெற்றவராயிருந்தாரா? என்ற பல வினாக்கள் எழுகின் றன. மார்க்கத்தை சீர்திருத்துவதற்கு பாதிலாய் தான் நபி, ஈஸா, மஹ்தி என்பலவராய் கூறி தன்னைப் பின்பற்ற

ஜனங்களை அழைத்தார் குர் ஆன் ஹதீஸுகளுக்கு விரோதமாய். இஷ்டப்படி வியாக்கியானம் செய்யவும் ஈஸா (அலை) மரணமடைந்து விட்டாரென்றும் கூற ஆரம்பித்தார். உலமாக்களிடம் பிரபல்யமானவராயிருக்கவேண்டியதிருக்க, அவரின் புதியகொள்கைகளைக்கண்ட உலமாக்கள் உண்மையை எடுத்துக்காட்டியும் கேட்காததால் கடைசியாக குபிருடைய பாத்வாவும் எழுதி வெளியிட்டு விட்டார்கள். ஸுன்னத்து ஜமா அத்தில் தோன்றிய முஜத்திதுகள் எவரும் மிர்ஸா ஸாஹிபுவைப்போல் மார்க்கத்திற்கு மாறுன விஷயங்களை கூறவேகிடையாது. உதாரணமாக ஓர் முஜத்திது அவர்களின் கொள்கையையும், மிர்ஸா ஸாஹிபு அவர்களின் கொள்கையையும் "முஜத்திதே-வக்த் கவ்ன் ஹோ-சக்தாஹய்" என்னும் உர்து புஸ்தகத்தில் காணப்படுவதை நேயர்கள் அறியும் பொருட்டு கீழே மொழிபெயர்த்துத்தருகிறேன். சகோதரர்கள் நன்கு கவனித்துப்படிப்பார்களாக. படித்துப்பார்ப்பீர்களாயின் மிர்ஸா ஸாஹிபு எவ்வாறு முஜத்திதாதல் கூடுமென்பதை நன்கு அறிந்துக்கொள்ளலாம். நாம் ஈண்டு வரையப்போகும் முஜத்திது அவர்களின் திருநாமம். ஹஜ்ரத் முஜத்தித் அல்பஸானி ஷேக்முஹம்மது ஸர் ஹந்தி (ரஹ்) எனப்படுவார். ஹஜ்ரத் ரத் ஸர் ஹந்தி அவர்கள் முஜத்திது என்பதை லாஹூர் முஹம்மது அலி சாஹிபும் ஒப்புக்கொண்டுள்ளார். "ஹஜ்ரத்முஜத்திது அல்பஸானி அவர்களின் நாமத்தை இத்தேசத்தின் (ஒவ்வொரு) குழந்தைகளும் அறிந்திருக்கின்றனர். அவர் ஹிஜ்ரி பதினோருவது நூற்றாண்டின் தலைப்பில் தாம் முஜத்திதென்று கூறினர். (த-அ-பக்கம் 8)

## மொழி பெயர்ப்பு

ஹஜ்ரத் முஜத்திதின் கொள்கை:—வானம், பூமி, இல்லீன், அஸ்பலீன் இவைகளின் இறைவன் ஒருவனே.

மிர்ஸா ஸாஹிபின் கொள்கை:—மிர்ஸாவின் இல்ஹாம் "நீ (மிர்ஸா) என்னிலிருந்து வெளிப்பட்டாய், நான் உன்னிலிருந்து" (இறைவன் எப்போது மிர்ஸாவிலிருந்து வெளிப்பட்டானோ மிர்ஸா பெரிய ஆண்டவனாய் ஆய்விட்டார்) "நான் ஒரு கஷ்பில் நானே ஆண்டவனாகயிருக்கக் கண்டேன். நான் ஆண்டவனாயிருக்கிறேனென்று உறுதியும் கொண்டேன். (கிதாபுல் பரிய்யத்ப 79) ஹஜ்ரத் முஜத்தித்:—இறைவன். வடிவம், உதாரணம் இவைகளை விட்டும் பரிசுத்தமானவன்.

மிர்ஸா ஸாஹிபு:—எனக்கு உதாரணமாக அல்லாஹ் த்த ஆலாவின் தரிசனை கிடைத்தது நான், என்கையால் அநேக முன்னறிக்கைகளை எழுதினேன். எழுதியதின் தாத்பரியம் எழுதிய முன்னறிக்கைகள் ஆகவேண்டுமென் பதேயாகும். எழுதிய காகிதத்தை கையொப்பத்திற்காக ஆண்டவனுக்கு முன்னால் சமர்ப்பித்தேன். இறைவன் எவ்வித தாமிதமுமின்றி சிகப்பு பேனாவினால் அதில் கையொப்பம் செய்தான் கையெழுத்து போடும்போது பேனாவில் மை அதிகமாயிருந்ததால் உதருவதைப்போல் உதரினான் பின் கையொப்பம் போட்டான். அந்த தக்ஷணமே விழித்துக்கொண்டேன். அச்சமயம் மியான் அப்துல்லா ஸன்வரி மஸ்ஜிதில் என் கால்களை அழுத்திக்கொண்டிருந்தார். அவருக்கு முன்னால் மறைவான சிகப்பு நிறதுளிகள் எனது சட்டையிலும் அவரின் தொப்பியிலும் விழுந்தன. இச்செந்நிற துளிகள் விழுந்ததும், பேனா உதரியதும் ஒரே சமயமாயிருந்தது ஆச்சரியம். ஒரு வினாடியின் வித்தியாசமும் கிடையாது. (நஹூஸுல்பில்லாஹி)

ஹஜ்ரத்முஜத்தித்:— ஆண்டவன் இருப்பதற்கு யாதொரு சொந்த இடமும் கிடையாது.

மிர்ஸாவின் இல்ஹாம்:— வானம், பூமி என்னுடனிருப்பதைப்போல் உன்னிடமுமிருக்கின்றன. (ஹகீகதல் வஹீ பக்கம் 75 மிர்ஸாஸாஹிபின் நூல்) "நீ என்னிடம் அர்ஷின் பதவியைப் போலிருக்கிறாய்,, (ஹகீகதல்வஹீ 86)

ஹஜ்ரத்முஜத்தித :—ஹஜ்ரத் ஈஸா (அலை) வானத்திலிருந்து இறங்கி ஹஜ்ரத் காத்தமுன்நபியின் அலைஹிஸ்ஸலாது வஸ்ஸலாம் இவர்களின் ஷரீஅத்தைப் பின்பற்றுவார். (இமாமே ரப்பானி முஜத்தித் அல்பஸானி மக்தூபாத் 17)

மிர்ஸா ஸாஹிபு:— ஈஸா (அலை) இறந்து விட்டார். அவர் வரவே முடியாது. மஸீஹ் இறங்குவதின் அந்தரங்கத்தை ஹஜ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களுக்குக் காண்பிக்கப்படவில்லை. வரவேண்டிய மஸீஹ் நானாகயிருக்கிறேன். திமிஷ்கைக்கொண்டு கருத்து காதியான் மரியமுடைய பொருள் குலாம் முர்துஜா (இவர் மிர்ஸாவின் பிதா)வின் மகன் மிர்ஸா குலாம் அஹ்மது. ஹதீஸுகளில் இறங்குவார்களென்று வந்ததின் பொருள் தயின் வயிற்றிலிருந்து "பிறப்பது" என்பதாகும்.

சகோதரர்களே! மேலே வரையப்பட்டுள்ள இமாமே ரப்பானி ஹஜ்ரத் முஜத்திதே அல்பஸானி (ரஹ்) அவர்களின் கொள்கைகள் மிகவும் தெளிவாயும் குர் ஆன், ஹதீஸுகளுக்கு ஒத்ததாயும் பரிசுத்த தன்மை வாய்தவைகளாயிருப்பதையும், மிர்ஸா ஸாஹிபின் கொள்கைகள் குர் ஆன் ஹதீஸு இவைகளுக்கு முற்றும் விரோதமாயிருப்பதுடன் ஜனங்களை வழி கேட்டிலாக்கக் கூடியதாயுமிருப்பதை நன்கு தெரிந்துக்கொள்ளலாம். இவ்விதக் கொள்கையுடைய

மிர்ஸா ஸாஹிபு எவ்வாறு முஜத்திதாவா ரென்பதை கவனிக்க வேண்டும். ஆதலின், ஒருக்காலுமிவர் முஜத்திதாகவும் ஆகமாட்டாரென்பதை ஒவ்வொருவரும் நன்கறிய வேண்டும். மிர்ஸா ஸாஹிபின் மேல் கூறிய கொள்கைகள் அந்தகாரத்திலாழ்த்தக் கூடியனவாயும் ஒரு மனிதனை காபிராக்கவும் போதுமானதாயிருக்கிறது. இறைவனை படைப்புகளுக்கு சமமாக்கி யிருக்கிறார். தானே ஆண்டவனென்றும், இறைவன் நபி பெருமானாரை நோக்கி "உங்களைப் படைத்திராவிடில் வானம், பூமி முதலியவைகளைப் படைத்திருக்க மாட்டேன்" என்றும் உலகிற்கு "ரஹ்மத்தா"யிருக்கிறாரென்றும், "முஹம்மது (ஸல்) உங்களுக்குக் கொடுப்பதைப் பெற்றுக்கொள்ளுங்கள்; விலக்குவதை விட்டுவிடுங்கள்" (குர்ஆன்) என்றும், "நபி பெருமான் (ஸல்) தன் சுயமாய் ஒன்றும் சொல்வதில்லை. வஹீயைக் கொண்டே சொல்லுகிறார்" (குர்ஆன்) என்றும் பலவாறாய் ஸர்வசக்தியுள்ள இறைவன் புகழ்ந்து பாராட்டியிருக்கும் போது எமது பெருமானாருக்கு ஈஸா (அலை) இறங்குவாரென்ற அந்தரங்கத்தை காண்பிக்கப் படவில்லை. பெனவும் கூசாமல் கூறியுள்ளார். இஃது விந்தையினும் விந்தை யன்றோ! இவர் கூறுவதை எவரேனும் ஏற்றுக்கொள்ள முடியுமோ? இவ்வாறு கூறுமிவர் எவ்வாறு இஸ்லாத்தை சீர் திருத்த முடியும்? ஒருகாலுமில்லை. மிர்ஸாயி கோஷ்டியினர் தமது குருவின் கொள்கைகளையும், தன்மையையும் சற்றும் உற்றுணர்ந்துப் பாராமல் ஈஸா வென்றும் மஹ்தி—முஜத்தி தென்றும் கூறிக்கொண்டு பிரசாரம் செய்வதில்யாது பயன்.

## தஜ்ஜால்

மஸீஹின் (ஈஸா அலை) போதனை முறையாக இல்லாமலிருக்கும் நிலையில் ஹஜ்ரத் மஸீஹின் போதனை முறை

யென்று, அதற்கு நேர் மாற்றமான முறையை பரத்திக் கொண்டிருப்பவர்களே தஜ்ஜால்களாவர். (த-அ-22 ப.) இக்கூற்றும் முற்றும் தவருகும். அலிசாஹிபு எவர்களைக் குறித்து மேல்க் கண்டவாறு கூறுகிருர்களென்பதை நாம் சொல்லாமல் நேயர்களே யூகித்துக்கொள்ளலாம். மிர்ஸாயி கோஷ்டியினர் மனம் போனபடி எல்லாம் தாறுமாருய் குர் ஆன் ஹதீஸுகளுக்கு பொருளும் வியாக்கியானமும் கூறுபவர்களாதலின் இவரின் இக்கூற்றைப்பற்றி எமக்கு ஆச்சரியமொன்றுமில்லை. தஜ்ஜாலுக்கும். அலிசாஹிபு கூறுவோருக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது. தவிர, தஜ்ஜால் இன்னும் வெளிப்படவும் கிடையாது. கீழ் வரும் நாயகத்திருமொழிகளில் தஜ்ஜால் ஒருவனேயென்றும் கடைசி காலத்தில் வெளிப்படுவானென்றும் நன்குதெரிந்துக்கொள்ளலாம்.

## நாயகத்திருமொழி,

1. உறுதியாக அல்லாஹ் ஒற்றைக்கண்குருடனல்ல, நிச்சயமா மஸீஹு த்தஜ்ஜால் வலதுகண்குருடன். (ராவி அப்துல்லா ரஸி)

2. ஒவ்வொரு நபிமார்களும், தங்கள் உம்மத்துகளுக்கு பொய்யனான ஒற்றைக்கண்குருடான (தஜ்ஜாலைப் பற்றி) எச்சரிக்கை செய்யாமலிருக்க வில்லை. உஷார்? அவன் ஒற்றைக்கண்குருடன். நிச்சயமாக உங்கள் ரப்பு (இறைவன்) ஒற்றைக்கண்குருடானவனல்ல. (அந்ததஜ்ஜாலின்) இருகண்களுக்குமிடையில் காப், ஃப். ரே. என்று எழுதப்பட்டிருக்கும். (ராவி அனஸ் ரஸி) . . .

3. (முன்] நபிகள் தங்கள் உம்மத்திற்கு எச்சரித்ததைப்போல், நான்உங்களுக்கு ஒருவிஷயத்தை அறிவிக்கட்டுமா? நிச்சயமாக அவன் ஒற்றைக்கண்குருடன், அவன் தன்னுடன், சுவர்க்கத்தைப்போலும், நரகத்தைப்போலும் கொண்டுவருவான். அவனின் சுவர்க்கத்தை, சுவர்க்கமென்றுசொல்லுவான். (ஆனால்) அதுநரகம். நூஹ் (அலை) தமது உம்மத்துகளுக்கு எச்சரிக்கை செய்ததைப்போல் நான் உங்களுக்கு எச்சரிக்கை செய்கிறேன். (ராவி அபீ ஹூரைரு ரலி)

[குறிப்பு:—தஜ்ஜால் சுவர்க்கத்தைப்போலும் நரகத்தைப்போலும் கொண்டு வருவது ஜனங்களை மிரட்டியும், சந்தோஷத்தை யூட்டியும் தன்னைப்பின் தொடரச்செய்வதற்காகும். யார் அவனை நம்பி பின் தொடருகின்றனரோ அவரை தன் போலி சுவர்க்கத்தில் வைப்பான். இச்சுவர்க்க வாதி நரகவாதியாவான். யார் அவனை எதிர்த்து நிராகரிக்கின்றனரோ அவர்கள் மீது கடிந்து தன் போலி நரகில் போடுவான். இப்படிப்பட்டவர்கள் சுவர்க்கவாதிகளாவர்.]

சகோதரர்காள்! நாயகத்திருமொழிகளில் அறியக்கிடக்கும் முதல்விஷயம் தஜ்ஜால் ஒன்றக்கண் குருடான ஒருவனென்று ஒருமையாய் கூறப்பட்டுள்ளதாகும். அலி சாஹிபு பன்மையாய்க்கூறுகிறார். இஃது ஹதீஸுக்கு முற்றும் விரோதமாகும். இரண்டாவது விஷயம் அவனின் நெற்றியில் காப், பெ, ரெ. என்று மூன்று எழுத்துக்களிருக்கும். இவ்வாறு எழுதப்பட்டவராக இக்காலத்தில் எவரும் காணப்படவில்லை. இன்னும் ஈஸா (அலை) உயிரோடிருக்கிறார் என்றும் அத்தியாயத்தில் ஈஸா (அலை)

அவர்களால் தஜ்ஜால் கொல்லப்படும் விஷயமாயும் அதற்கு ரிய நாயகத்திருமொழிகளும் வரையப்பட்டுள்ளதையும் நே யர்கள் கவனிப்பார்களாக. இவ்வாறிருக்க, அலி சாஹிபு கூறும் கூற்றிற்கு ஆதாரமெங்கே? ஆதலின், ஒற்றைக்கண் குருடனான தஜ்ஜால் நாளது வரை வெளிப்படவே கிடை யாதென்பது திண்ணம், நாயகத்திருமொழிகளில் கூறப்ப ட்டுள்ளவாறு மெய்யான தஜ்ஜால் கடைசி காலத்தில் வெளிப்பட்டு ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்களால் கொல்லப் படுவானென்பது திண்ணம்.

## யாஜூஜ் மாஜூஜ்.

இதுகாலை முழு உலகின் மீது அதிகாரம் பெற்றுள்ள கூட்டத்தினரே யாஜூஜ் மாஜூஜ கூட்டத்தினராகும். (த-அ. பக்கம் 21) இஃது முற்றும் தவறாகும். யாஜூஜ் மாஜூஜ் தனிப்பட்ட கூட் டத்தினராகும். அக்கூட்டத்தினர் தற்போது உலகின் எந்த பாகத்தையும், தற்கால அரசர்களைப்போல் அரசா ட்சி செய்யக்கூடியவர்களாயில்லை. இக் கூட்டத்தினர் தற் போது மலையில் அடைபட்டுக் கிடக்கின்றனர். கடைசி காலத்தில் அவர்கள் அவ்வடைப்பிலிருந்து வெளிப்பட்டு வருவார்கள். அவர்கள் கொடிய கூட்டத்தினராகும். இவர் களைப் பற்றி எமது திருமறையிலும், ஹதீஸுகளிலும் தெளிவாய்க் கூறப்பட்டுள்ளது. இக் கூட்டத்தினர் யாபிஸ் பின் நூஹின் மக்களாகும். ஸுல்கர்னைன் அவர்கள் உல கின் மேற்கு, கிழக்கு பாகங்களின் சுற்றுப் பிரயாணம் செய்தபின் வட பாகத்திற்குச் சென்றார்கள். அங்கு இர ண்டு மலைகளுள்ள ஓர் இடத்தில் ஒரு கூட்டத்தினர் வசித் துக் கொண்டிருந்தனர். அக் கூட்டத்தினர் ஸுல் கர்னைன்

அவர்களிடம் வந்து, மலையிலுள்ள யாஜூஜ் மாஜூஜ் என்னும் கூட்டத்தினர் அடிக்கடி வந்து நமது நிலங்கள், கால் நடை, இவைகளுக்கு அதிக கஷ்ட நஷ்டத்தை யுண்டாக்குகின்றனர். ஆதலின், இவர்கள் நமக்கு கஷ்ட நஷ்டத்தை யுண்டாக்காமலிருக்கும்படி ஓர் அடைப்பு செய்யும்படியாய் வேண்டிக் கொண்டனர். இவ்விஷயத்தை நமது திருமறையே கூறுகிறது. "ஸுல்கர்னைனே! யாஜூஜ் மாஜூஜ் (கூட்டத்தினர்) பூமியில் குழப்பம் செய்கின்றனர். ஆதலின், எங்களுக்கும், அவர்களுக்குமிடையில் அடைப்பு ஏற்படுத்த, நாம உங்களுக்கு பொருளை சேகரித்துக் கொடுக்கலாமா?" (குர்ஆன் ஸூரே கஹப்) பின்பு ஸிகந்தர் ஸுல்கர்னைன் அவர்களின் பொருள் உதவியை வேண்டாமென்று சொல்லிவிட்டு இருமலைகளுக்கிடையில் இரும்பு கதவுகளால் அடைப்பு ஏற்படுத்தி விட்டார். இவ்விஷயமும் அதே ஸூராவில் கூறப்பட்டிருக்கிறது. இவற்றை உற்று நோக்கினல் அலி ஸாஹிபு கூறுவதைப் போலல்லவென்றும் அவர்கள் தனிப்பட்ட ஓர் கூட்டத்தினரென்றும் அவர்கள் அக்காலத்திலேயே ஸுல்கர்னைன் அவர்களால் அடைக்கப் பட்டுள்ளார்களென்றும் ஸுன்னத்துஜமாஅத்தினர்களின் நம்பிக்கையின்படி கடைசி காலத்தில் வெளிப்படுவார்களென்பது நன்கு புலப்படும். "யாஜூஜ் மாஜூஜ் கூட்டத்தினரை திறக்கப்படும்போது அவர்கள் எல்லா உயர்த்தியான தானங்களிலிருந்து (தாண்டி) விரைவாய் வெளிப்படுவார்கள்." (குர்ஆன் ஸூரா அன்பியா) இனி எமது உலகரட்சகர் முக்பலேஸாதிக ஹஜ்ரத் சையதினு முஹம்மது முஸ்தா ரஸூல் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளியுள்ள அமுர்த மொழிகளை கவனியுங்கள்.

நாங்கள் பேசிக்கொண்டிருக்கும்போது நாயகம் ரஸூல் (ஸல்) அவர்கள் எங்களிடம் வந்து என்ன பேசிக் கொண்டிருக்கிறீர்கள் என வினவ, நாம் கியாமநாளையைப் பற்றி பேசிக்கொண்டிருந்தோமென்று சொன்னோம். (அதற்கு நாயகம் ஸல்) பத்து அடையாளங்களைக் காணுவதற்கு முன்னால் கியாமம் வராது என்று சொல்லி (அவ்வடையாளங்கள்.) துகான் (புகை) தஜ்ஜால், தாப்ப, மேற்கில் சூரியன் உதயமாதல், ஈஸா (அலை)இறங்குதல், யாஜூஜ் மாஜூஜ் (வெளிப்படல்)..........(ராவி ஹுதைபதிப்னு அஸீதுல் கிப்பாரி ரலி)

அல்லாஹ் யாஜூஜ் மாஜூஜ் (கூட்டத்தினரை) அனுப்பும்போது அவர்கள் எல்லா உயர்த்தியான தானங்களையும் (தாண்டி) தீவிரமாய் வெளிப்படுவார்கள். அவர்களுள் ஒரு சாரார் தபரிய்யாவின் புஹீரத் என்னும் கடல் அருகில் செல்லும் போது அதிலுள்ள தண்ணீரையெல்லாம் குடித்து விடுவார்கள். மற்றொரு சாரார் அங்கு வந்து பார்த்து இதில் ஒரு தடவைதான் தண்ணீர் இருந்ததது போலும்? எனக்கூறுவார்கள். பின்பு பைதுல் முகத்தஸிலுள்ள கமரென்னும் மலையின் கடைசிவரைச்சென்று நாம் பூமியிலிருந்தவர்களைக் கொன்று விட்டோம். வாருங்கள் வானத்திலுள்ளவர்களைக் கொன்று விடலாம். என்று சொல்லி வானத்தின் மீது அம்புகளை எய்வார்கள்; அவ்வம்புகளை இறைவன் இரத்தத்தில் தோய்க்கப்பட்டவைகளாக திரும்பி (அவர்களிடமே விழச்செய்வான்...........(நீளமான ஹதீஸின் ஓர் பாகம் ராவி நவாஸ் மின்ஸம்ஆன் ரலி)

அபீ ஹுறைரா (ரலி) அவர்களால் ரிவாயத்து செய்யப்பட்டுள்ள ஓர் ஹதீஸில் "யாஜூஜ் மாஜூஜ் கூட்டத்தினர் வெளிப்பட்டு கடல், ஆறு, கிணறு, இவைகளின் தண்ணீரெல்லாம் குடித்து விடுவார்கள் என்று வந்திருக்கிறது.

சகோதரர்காள்! மேலே கூறியுள்ள நாயகத்திருமொழிகளைச் சற்று கவனித்துப்பார்ப்பீர்களாக. அத்திருமொழிகளின்படி அக்கூட்டத்தினர் வெளிப்பட்டு விட்டனரா? எவரேனும் கடல், ஆறு, கிணறுகளின் தண்ணீரெல்லாம் குடித்து விட்டனரா? வானத்தின்மீது அம்புகளெய்தனரா? அம்புகள் மறுபடி இரத்தத்தில் தோய்க்கப்பட்டதாக திரும்பிவந்து விழுந்தனவா? இல்லை இவைகளில் ஒன்றும் நடைபெறவுமில்லை. அக்கூட்டத்தினர் இன்னும் வெளிப்படவுமில்லை. இவ்வாறிருக்க அலிசாஹிபு கூறுவதற்கும் எமது உலகரட்சகர் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளியுள்ள விஷயங்களுக்கும் ஏதேனும் சம்பந்தங்களுண்டா? ஒன்றுமேயில்லை. ஆதலின் இவரின் கூற்றானது ஆதாரமற்றதாகும்.

## கிப்லாவை நோக்கினால் மட்டும் போதுமா?

எவர் கிப்லாவை நோக்கி தொழுகிறாரோ அவரை காபிராக்க வேண்டாமென்பது ரஸூல் (ஸல்) அவர்களின் கட்டளை. இங்கு ஒரு சாரார், மற்றொரு சாரார் மீது சிறு சிறு குற்றங்களை கற்பித்து காபிராக்குகின்றார்கள் என்றும் அலி சாஹிபு கூறுகிறார். (த-அ. பக்கம் 4)

நபிகள் நாயகம் முஹம்மது முஸ்தபா ரஸூல் (ஸல்) அவர்கள், ஒருவர் கிப்லாவை முன் நோக்கி தொழுவதால் மட்டும் முஸ்லிமாய் விடுவாரென்று கூறவில்லை. ஒரு முறை

பிக்கிப்லாவை மட்டும் முன் நோக்கி முஸ்லிம்களை ஏமாற்று வதற்காக தொழுகிறான். அவன் முஸ்லிமாய் விடுவானா? இஃதன்றி ஒருவனின் சொல், செயல்களெல்லாம் குர் ஆன் ஹதீஸுகளுக்கு விரோதமாயிருக்கின்றன. ஆனால் முஸ் லிம்களைப் போல் நடித்துக்கொண்டு பஹிரங்கமாய் ஐந்து வேளையும் தொழுகிறான் இப்படிப்பட்ட ஒருவன் முஸ்லி மாய் விடுவானா? "(முனாபிக்குகள்) ஈமான் கொண்டவர் (முஸ்லிம்) களைச் சந்தித்தால், நாம் ஈமான் கொண்டுள் ளோமென்கின்றனர். அவர்களின் ஷைதான்களிடம் சென் றால், நாங்கள் உங்களுடனிருக்கிறோமென்று சொல்லுகிறார் கள்." (குர் ஆன் ஸூரேபகர்.) இவ்வாயத்து முனாபிக் குகளுக்காகவே இறக்கப்பட்டது. முஸ்லிம்களுடன் தானும் முஸ்லிமென நடிப்பதும், தனது முனாபிக்கு கோஷ் டியினருடன் போய் முனாபிக்காகவேயிருப்பவன் எவ்வாறு முஸ்லிமாய் விடுவான்? இன்னும் இறைவன் கூறுவதைப் பாருங்கள். "(முஹம்மது ஸல்-மே) முனாபிக்குகள் உங்க ளிடம் வந்தால், "நிச்சயமாக தாங்கள் அல்லாஹ்வின் ரஸூலாயிருக்கிறீர்களென்று நாம் சாட்சி சொல்லுகிறோ மென்று" கூறுகிறார்கள். நிச்சயமாக தாங்கள் அல்லாஹ் வின் ரஸூலென்று அல்லாஹ் அறிவான். நிச்சயமாக முனாபிகீன்கள் பொய்யர்களென்று அல்லாஹ் சாட்சி சொல்லுகிறான். (குர் ஆன் ஸூரே முனாபிகூன்) ஒரு வன் வாயால் மட்டும் தான் முஸ்லிமென்றும் நபியின் மீது ஈமான் கொண்டேனென்றும் சொல்லிக்கொண்டு தன் சொல். செயல், அனுஷ்டானங்களில் நிரூபித்துக்காண்பிக்கா மலிருப்பனாயின் அவனை எவ்வாறு முஸ்லிமென்று கூறக் கூடும்? "மனிதர்களில் சிலர், அல்லாஹ்வைக்கொண்டும் கடைசி (கியாம) நாளையைக்கொண்டும் ஈமான் கொண்டோ

மென்று சொல்லுகிறார்கள் அவர்கள் முஃமீன்களல்ல. (குர் ஆன்ஸூரேபகர்) இஃது ஸர்வ சக்தியுள்ள இறைவனின் தீர்ப்பாகும். ஆதலின் கிப்லாவை மட்டும் முன் நோக்கிய தால்மட்டும் முஸ்லிமாய் விடமுடியாது என்பது திண்ணம். இதற்குக்கீழ்கண்ட குர்அனின் திருவசனங்களே போதியசான்றாகும். "நீங்கள், உங்கள் முகங்களை கிழக்கு, மேற்கு பக்கத்தை நோக்கி (தொழுவதால் மட்டும்) நன்மை யில்லை. ஆனல்,யார் அல்லாவைக்கொண்டும் கடைசி (கியாம) நாள் மலக்குகள், கிதாபு (வேதம்)கள் நபிமார்கள் இவர்களை க்கொண்டுஈமான்கொள்ளுகிறாரோ அதுவேநன்மையாகும். (குர்ஆன்ஸூரேபகர்) சகோதரர்காள்! அலிசாஹிபு கூறுவ தைப்போல் கிப்லாவை முன்னோக்கியதால் மட்டும் "முஸ் லிம்" ஆய்விடுவானு' இவ்வாறு மேல்கூறிய ஆயத்துகளில் காணப்படுகிறதாவென்பதைப் பாருங்கள். இறைவனது தி ருவசனம் இவ்வாறிருக்கநபிகள்பெருமான் (ஸல்) அவர்கள் கிப்லாவை நோக்கி தொழுவதால்மட்டும் முஸ்லிமாய் விடு வானென்று கூறுவார்களா? ஒருக்காலுமில்லை. இஃது அலி ஸாஹிபின் தந்திரமாகும். குர் ஆன், ஹதீஸ்களு க்கு முன்னால் அலி சாஹிபின் தந்திரம் செல்லாதென் பதை அவர் உணரவேண்டும்.

எந்த மனிதன் அல்லாஹ் ஒருவனே அவன் ஸர்வ சக்தியுள்ளவன். அவன் நாடியதைச் செய்யக் கூடியவன். இணையில்லாதவன், மனைவி, மக்களில்லாதவன், தனித்த வன் என்றும் அவனைக்கொண்டு ஒரு வஸ்துவையும் இணை யாக்காமலும், கியாம நாள் ஒரு நாள் உண்டென்றும், அந் நாளில் பஞ்சபூத சரீரத்தாலேயே எழுப்பப்பட்டு கேள்வி கணக்குக் கேட்டபின் மானிடரின் வணக்கங்களின்படி நல்

லோர் சுவர்க்கமும் பர்விகள் நரகவேதனை அனுபவிப்பார் களென்றும், மலக்குகள் உண்டென்றும், அவர்கள் ஒளி வால் படைக்கப்பட்டவர்களென்றும், ஆணுமல்ல, பெண் ணுமல்ல வென்றும், இறைவனல் இறக்கப்பட்ட வேதங் கள் உண்மையென்றும், அவனல் அனுப்பட்ட நபிமார்கள் உண்மையானவர்களென்றும், அவனின் தூதர்களென்றும் ஈமான் கொண்டவனே முஸ்லிமாவானே யன்றி முஸ்லிம் களை ஏமாற்றுவதற்காக ஒருவன் கிப்லாவை முன்னேக்கி த்தொழுது மார்க்க விஷயங்களில் குர்ஆன், ஹதீஸுக்கு விரோதமாய் நடப்பவன் எவ்வாறு முஸ்லிமாவான்?

மீண்டும் அலிசாஹிபு கூறுவதாவது:— "அவர்கள் (உலமாக்கள்) கேவலம் சிறு விதர்ப்பங்களால் ஒன்ருே டொன்று காபிராக்கி, சகோதரனை விட்டு, சகோதரனை பிரி த்துக்கொண்டிருக்கின்றனர் இத்துடன் ராஜீய தலைவர்களு ம். பொது ஜனங்களும்:உலமாக்களின் பத்வாக்களுக்கு தலை சாய்க்கும் பாடியாய் வற்புறுத்துகின்றனர். (த-அ-பக்கம் 4.) அலி சாஹிபு கூறுவதைப்போல் உலமாக்கள் கேவல மான சிறு சிறு விஷயங்களுக்காக ஒருவர் மீது காபிரென் று பத்வா எழுதவே மாட்டார்களென்பது திண்ணம். உண்மை முஸ்லிம்களை காபிராக்கவேண்டுமென்ற கருத்தும் கிடையாது, அஃது அவர்களின் தொழிலுமல்ல. மார்க் கத்தை வளர்க்க வேண்டியதே உலமாக்களின் கடமையே யன்றி குறைப்பதல்ல, ஆனல், எந்த மனிதன் அல்லது ஒரு சாரர் முஸ்லிமெனச் சொல்லிக்கொள்பவர் அஹ்ல ஸுன்னத் வல்ஜமா அத்தின் கொள்கைகளுக்கும் குர்ஆன் ஹதீஸிற்கும் முற்றும் விரோதமாயும், அந்தகாரம், ஷிர்க், முதலிய காபிராக்கக்கூடிய கொள்கைகளை யுடையவர்களா

கவும், பிரசாரம் செய்யக் கூடியவர்களாகவுமிருந்தால் முதலில் அன்னாருக்கு உண்மையை எடுத்துக்காட்டி நேர்வழிக்குக் கொண்டுவரவேண்டியது உலாமக்களின் கடமையாகும். அவற்றை ஒப்புக்கொள்ளாமல் நிராகரித்து தாம் பிடித்த முயலுக்கு மூன்றே கால்களென சாதித்துக்கொண்டு பிடிவாதமாயிருப்பார்களாயின், அப்படிப்பட்டவர்களின் மாயவலையில் சிக்குண்டு மற்றவர்கள் காபிராகாமலிருப்பதற்காக குபிருடைய பத்வா வெளியிடவேண்டியது. உலமாக்களின் பிரதம கடமையாகும். ஆதலின் உலமாக்களின் மீது குற்றங்கூறுவது வீணேயாகும்? உலமாக்கள், மிர்ஸாயி கோஷ்டியினர் மீது குபிருடைய பத்வா எழுதியதற்கு அன்னாரின் அந்த காரக் கொள்கையைக்கண்டேயாகும். அவற்றில் சிலவற்றை உலமாக்களின் பத்வாக்களிலிருந்தே முஸ்லிம் சகோதரர்கள் அறிந்து கொள்ளும்பொருட்டு மொழி பெயர்த்து தருகிறோம்.

1. மஸீஹ்மவ்வூது (இவரின் வருகையைப்பற்றி ஹதீஸில் வந்திருக்கிறது) நானாகயிருக்கிறேன். (மிர்ஸா ஸாஹிபின் நூல் இஸாலே அவ்ஹாம் 665.)

2. நான் முஸ்லிம்களுக்கு மஹ்தியாகவும், ஹிந்துக்களுக்கு கிருஷ்ணனாகவு மிருக்கிறேன். (லெக்சர் ஸியால் கோட் பக்கம் 13.)

3. இயேசு மஸீஹின் முஅஜிஸாத்துக்கள் மெஸ்ரிஸமாயிருந்தது. (அன்ஜாம் ஆத்தமின் அனுபந்தம் பக்கம் 5.

4. இயேசு மஸீஹின் முஅஜிஸாத்துக்கள் மெஸ்மரிஸமாயிருந்தது அவரிடம் ஏமாற்றுதலைவிட வேறொன்றுமில்லை. (இஸாலே அவ்ஹாம் பக்கம் 303-322 அ-ஆ அநுபந்தம் பக்கம் 7.)

5. ஏ ஜனங்களே; நான் உங்களிடம், உங்கள் எல்லோருக்கும் நபியாகவந்திருக்கிறேன். (ஹகீகதுல்வஹீ பக்கம் 391.)

6. என்னை ஒப்புக்கொள்ளாதவன் காபிராவான். (ஷை பக்கம் 163.)

7. எனக்கு ஆண்டவன் "என்மகனேகேள்" என்று சொல்லியிருக்கிறான். (அல்புஷ்ரூபக்கம் 49.)

8. எனக்கு இல்ஹாமாயிருக்கிறது. (அதாவது) (நான்) வஹீயன்றி சொல்வதில்லை (அர்பயீன் பக்கம் 3.)

9. கடைசிகாலத்தில் தஜ்ஜால் வருவாரென்பது முற்றும் தவறு. (இஸாலே அஹாம் 237.)

10. ஈஸா (அலை) அவர்களின் பிதா "யூஸுப் நஜ்ஜார்" (ஷை ப. 303.)

சகோதரர்களே! எந்த மனிதன் இக்கொடிய கொள்கையுடையவனயிருக்கிறானோ அவன் காபிரென்பதில் சந்தேகமுண்டோ? இவ்வித கொள்கையுடையவர்கள் விஷயமாய்ச் சங்கைப்பெற்ற உலமாக்கள் முதலில் உண்மையை உணர்த்தியும் கேட்காமலிருந்ததால் குபிருடைய பத்வாவை எழுதி பொது ஜனங்களை எச்சரிக்கை செய்யாமலிருக்க முடியுமா? ஒருகாலுமில்லை. ஆதலின், உலமாக்கள் மீது குற்றம் கூறுவது வீணேயாகும்.

## மிர்ஸாவினாலுண்டான வாழி கேடு.

மிர்ஸா ஸாஹிபு தம் மனம்போனபடி யெல்லாம் தாறுமாறான விஷயங்களை வெளியிட்டார். ஆனால், அவர் கோரியபடி ஒன்றுமே நடைபெறவில்லை. ஒரு சிலர் அவ

ரின் கூற்றுகளை நம்பியவரை பின் பற்றினர். தற்போது அவரின் சிஷ்ய கோஷ்டியினர் தமது குருவின் அந்தகாரக் கொள்கைகளைப் பரத்த பகீரத முயர்ச்சி செய்து வருகின்றனர். மிர்ஸா ஸாஹிபிற்குப்பின் அவரின் கோஷ்டியினர் ஒன்றோடொன்று முறண்பட்டு தனித்தனியாய்ப் பிரிந்து நிற்கின்றனர். காதியானியிலோர் சாராரும் லாஹூரிலோர் சாராருமிருக்கின்றனர். காதியானியில் மிர்ஸா ஸாஹியின் புத்திரர் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹமது ஓர் சங்கத்தை ஸ்தாபித்துக் கொண்டிருக்கிறார். இவரை காதியானிகள் "கலீபதுல் மஸீஹ்" அதாவது மிர்ஸாவின் கலீபாவென்று கொண்டாடுகின்றனர். லாஹூரில் மவ்லவி, முஹம்மது அலி ஸாயபு ஒரு சங்கத்தை ஸ்தாபித்து அதற்கு அவர் தலைவராய் விளங்குகின்றார். காதியானி பார்டிக்கும், லாஹூரி பார்டிக்கும் முறண்பாடுண்டு அவர்களுக்குள்ளேயே முனாபிக்கென்றும் காபிரென்றும் கூறிக்கொள்கின்றனர். உற்று கவனிக்கும்போது இரு பார்டிகளின் கொள்கைகளும் ஒன்றாகவே காணப்படுகிறது. காதியானிகள் மிர்ஸாவை பஹிரங்கமாய் நபியென்று கூறுகின்றனர். லாஹூரிகள் அவ்வாறு பஹிரங்கமாய் கூறுவதில்லை. லாஹூரிகளின் பேச்சு, எழுத்துகளை நன்கு ஊன்றி கவனித்தும் படித்தும் வந்தால் இவர்களும் மிர்ஸாவை நபியென்று கூறுவதை நன்கு தெரிந்துக்கொள்ளலாம். இவர்களன்றி மிர்ஸாவின் சிஷ்யரில் இருவர் தோன்றி யுள்ளார்கள். அவர்களின் கூற்றோ மிகவும் வேடிக்கையானது. அவர்களின் சொற்கள் அந்தகாரம் நிறம்பியதாகவே யிருக்கின்றது. இவ்விருவர்களைப் பற்றி ஹஜ்ரத் மவ்லானா ஆஸி அம்ரத்சரி என்பவர் அம்ரத்சரில் வெளியாகும் "அல்பைஜ்" என்னும் மாத சஞ்சிகை

யில் வெளியிட்டுள்ளார். அதன் முக்கிய சாராம்சத்தை கீழே மொழிபெயர்த்துத் தருகிறேன்.

ஸியால் கோட் ஜில்லா, ஸம்பட்யால் வாசியான மிஸ்டர் முஹம்மது ஸயீது பி. ஏ. முதலில் ஸ்கூல்களின் இன்ஸ்பெக்டராகவிருந்து பின் ஹெட்மாஸ்டரானார் இவர் இன்ஸ்பெக்டராயிருக்கும்போது அம்ரத்ஸர் இஸ்லாமியஸ்கூலுக்கு பக்கத்திலுள்ள ஓர் வீட்டை வாடகைக்கமர்த்திக்கொண்டு வசித்து வந்தவர். நான் "இரண்டாவது குத்ரத்வெளிப்படும் தானமாயிருக்கின்றேனென்று தாவாச்செய்தார்" ஏனெனில் மிர்ஸா ஸாஹிபு தான்" இரண்டாந்தடவை வெளியாவேனென்று கூறியிருந்தார். சில அடையாளங்களும் காண்பித்திருந்தார். அதன்படி மிஸ்டர் முஹம்மது ஸயீது தான் மிர்ஸாவின்" அவதார"மென்று வெளியிட்டார். முஹம்மது ஸயீது அவர்களை ஜனங்கள்" பச்சாரோனு" வென்ற பெயராலழைத்து வந்தனர். இவர், எந்தவிஷயங்கள் இன்னும் திருத்தப்படாமலிருக்கின்றனவோ, அவற்றை மிர்ஸா ஸாஹிபின் வயதோ பூர்த்தி செய்யவில்லை (அதாவது அதற்குள் விண்ணுலகேகிவிட்டார்) அப்படியேயிருந்து விட்டன ஆதலின், அவற்றைப்பூர்த்தி செய்வதற்காக இறைவன் என்னையனுப்பியிருக்கிறன் என்னிடம் ஒருவர் தன்னிடம்,,பாச்சாரோனு" கூறியதாக கூறியதாவது:— கத்னு செய்வது குர் ஆனல் விலக்கப்பட்டிருக்கிறது இஃது ஷைதானின் செயலாகும் (இதனல் இவரின் குமாரனுக்கும் நாளது வரை கத்னு செய்யப்படாமலிருக்கிறது.) கள், சாராயம், குறிப்பிட்ட ஓர் அளவு குடிப்பது ஆகும். தங்கம் வெள்ளி (ஆண்பலர்) அணிவதாகும். மிர்ஸா ஸாஹிபு ஈஸா (அலை) அவர்கள் மரணமடைந்து விட்

டாரென்று நிரூபித்து ஜனங்களை ஷிர்க்கை விட்டும் நீக்கினார். ஆனால், ஈஸா நபியவர்கள் தகப்பனின்றி பிறந்தாரென்று (ஜனங்கள்) கொண்டுள்ள ஷிர்க்கான நம்பிக்கையை நீக்கமுடியவில்லை. (பாவம்! இவர் தன் குரு நபி ஈஸா அவர்களின் பிதா ஈசுப் நஜ்ஜாரென்று கூறியதை யறியார் போலும்!) இவ்விஷயம் அவரு (மிர்ஸாவு) க்கும் வெளியாகவில்லை. நான் இவ்விஷயத்தை விளக்கவே பிறந்திருக்கிறேன். இன்று மிர்ஸா ஸாஹிபு இருப்பாராயின் அவரும் என்னைப்பின்பற்றவேண்டியது கடமையாகும். எந்த மதஸ்தனாயினும் சரியே எனக்கு பை அத்துச் செய்துக்கொடுக்கவேண்டும். (நவூதுபில்லாஹி.) இவ்வாறு இன்னும் தன் மனம் போனவாரெல்லாம் கூறினாரும்.

இரண்டாவது மவ்லவி அப்துல்லாதீமாபூரியாவர். இவர் காதியானை விட்டுவந்ததுடன் இவருக்கு இல்ஹாம் பொழிய ஆரம்பித்ததாம். இவரின் மிர்ஸா ஸாஹிபின் நுவுவ்வத் முடிவடைந்த பின் (அதாவது மிர்ஸா மரணமடைந்த பின்) ஓர் தப்ஸீர் எழுதினார் அத்தப்ஸீரில் இவரின் இல்ஹாம்களே நிறம்பிக்கிடக்கின்றன. அத்தப்ஸீரைபடிப்பவர் "இம்மரத்திற்கு சமீபிக்க வேண்டாம்; அவ்வாறு சமீபிப்பீராயின் அனியாயக்காரர்களினின்றுமாய் விடுவீர்" என்று (ஹஜ்ரத் ஆதம் ஹவ்வா (அலை) அவர்களுக்கு கூறிய) ஆயத்துக்கு வந்தால் குபிரிய்யத்காணப்படும் அத்தப்ஸீரை மேல் கொண்டு பார்க்கவிரும்பாமல் தூர எறிந்து விடுவார். மரத்தைக்கொண்டு தாத்பரியம் ஹவ்வா (அலை) ஹவ்வா (அலை) பாலிகில்லாமலிருந்ததாகவும் ஹஜ்ரத் ஆதம் (அலை) ஹவ்வா (அலை) அவர்களிடம் சமீபிக்கநாடியதாகவும்'........மேல்கொண்டு விஷயுங்கள் எழுத அரு

வருப்பாயும், வெட்கமாயுமிருப்பதுடன் அவற்றை எழுத கையும் நடுங்குகின்றது. சுறுங்கக்கூறுமிடத்து ஹஜ்ரத் ஆதம் (அலை) அவர்கள் மீது லூத்தின் பழிசுமத்துகிறார். (நவூஸு பில்லாஹி மின்ஹா) இவ்விஷயம் அல்பைஜ்ஹி 1343 முஹர்ரம் மாதசஞ்சிகையில் காணலாம். இக்கூற்று களெல்லாம் ஜனப், மிர்ஸாஸாஹிபின் சிஷ்யர்களின் கூற்று களாகும். குருவே தன் மனம் போனபடியெல்லாம் கூறியிருக்க, சிஷ்யர்களுக்கு சொல்லவாவேண்டும். இவ்வாறு மிர்ஸா ஸாஹிபிற்குப்பின் அவரின் சிஷ்ய கோஷ்டியினர் பலவாருக தம் தம் இஷ்டப்படி பிரிந்து விட்டனர். தம் இஷ்டப்படி பிரசாரம் செய்யவும், ஜனங்களை தங்கள் பக்கம் இழுக்கவும் பற்பல விதமான முயர்ச்சிகள் செய்து வருகின்றனர். இனியாவது உண்மையை உணர்ந்து நேர் வழி பெருவார்களா?

## சங்கை பெற்ற உலமாக்களின் பத்வா

மிர்ஸா ஸாஹிபின் ஷிர்க் கான, போதனை, கொள்கைகளைக்கண்ட எமது சங்கைப்பெற்ற உலமாக்கள் மிர்ஸாயி கோஷ்டியினர் மீது குபிருடைய பத்வா எழுதி வெளியிட்டார்கள். ஹிஜ்ரி 1311-ஸூ சென்னை மவ்லானு உபைதுல்லா சாஹிப் கிப்லா அவர்களால் பத்வா எழுதப்பட்டு உலமாக்களுடைய கையொப்பங்களுடன்.வெளியாயிருக்கிறது. வட இந்தியாவில், போபால், தானூன், ஸஹாரன்பூர், ராய்பூர், பதாயூன், லக்னூ, ஹுஷ்யார்பூர், முல்தான், பிஷாவர், முதலிய முப்பது ஊர்களின் பிரபல்யமான சுமார் 150 உலமாக்களுக்குமேல், பத்வாக்கள் எழுதியும், அவற்றில் கையொப்பம் செய்தும் புஸ்தக ரூபமாக

பத்வா வெளியிட்டிருக்கிறார்கள். அப்பத்வாக்களில், மிர்ஸாயிகளுடன் உறவு கொள்ளக்கூடாதென்றும், முஸ்லிம்களின் பெண்ணை அவர்களுக்கு விவாஹம் செய்து கொடுப்பதும், அவர்களின் பெண்ணை முஸ்லிம்கள் விவாஹம் செய்வதும் கூடாது. கலியாணமான பின் எவரேனும் மிர்ஸாயி மதத்தை தழுவுவாராயின் தக்ஷணமே நிக்காஹ் பிரிந்து போய் விடும், முஸ்லிம்களின் கபரஸ்தானில் மிர்ஸாயிகளுக்கு இடம் கொடுக்கக்கூடாது. அவர்களால் வேட்டை நாய், இ ரா ஜா ளி, இவைகளால் வேட்டையாடப்பட்ட பிராணியையோ, பட்சியையோ புசிப்பது கூடாது சுருங்கக்கூறுமிடத்து முஸ்லிமுடன் கொண்டாடும் உறவைப் போல் மிர்ஸாயிகளுடன் உறவு கொள்ளக்கூடாதென்று எமது உலமாக்களால் பத்வா வெளியிடப்பட்டுள்ளது இப்பத்வாவின்படி முஸ்லிம்கள் பின்பற்றி நடக்க வேண்டியது கடமையாகும். கோர்ட்டுகளில் முஸ்லிமல்லாத ஜட்ஜுகளும் கூட காதியானிகளை காபிரென்றே தீர்ப்பளித்திருக்கின்றார்கள். இவற்றை கண்டாவது அந்த மிர்ஸாயி கோஷ்டியினர் நேர்வழிப்பெற முயலாமல் ஓரே பிடிவாதமாயிருக்கின்றனர். இறைவனின் பால் மன்னிப்பு கேட்டு நேர்வழி பெறுவார்களாயின் மிகவும் நலம். தவ்பா உடைய வாசல் திறக்கப்பட்டேயிருக்கின்றது.

## விளக்கம்.

அருமை முஸ்லிம் சகோதரர்காள்! நாம் இதுவரை கூறிவந்த விஷயங்களால் நீங்கள் விளங்கிக்கொண்டதென்ன?

1. வஹீயானது நபிமார் (அலை) அவர்களுக்கே வருமேயன்றி வேறெவருக்கும் எம்முகாந்திரத்தைக் கொண்டும்

வரவேமாட்டாது. வஹீவருகின்றதென்று எவரேனும் கூறுவர்களாயின் அஃது ஆதாரமற்ற பொய்க்கூற்றேயாகும். நபிகள் பெருமான் முஹம்மது (ஸல்) அவர்கள் கடைசி நபியாயிருப்பதால் அவர்களுக்குப்பின் நபியுமில்லை வஹீயுமில்லை.

2. இல்ஹாம் அவ்லியாக்களுக்குண்டாகுமெனினும், அவ்வில்ஹாமின்படி இதரர்கள் நடக்கவேண்டுமென்ற கட்டாயமில்லை. தவிர, அஃது குர் ஆன், ஹதீஸ்களுக்கு உட்பட்டிருக்கவேண்டும். இல்ஹாமில் இல்ஹாமே ரஹ்மானி, ஷைதானியென்று இருவகையுண்டு. மிர்ஸாவின் இல்ஹாம் ஷைதானியாகும்.

3. ஹஜ்ரத் நபி ஈஸா அலை ஹிஸ்ஸலாம் அவர்கள் வானுலகில் உயிருடன் ஜீவித்துக்கொண்டிருக்கிறார். கடைசி காலத்தில் வானத்திலிருந்து இறங்கிவந்து தஜ்ஜாலைக் கொல்லுவார். மிர்ஸா ஸாஹிப் எம்முகாந்திரத்தைக்கொண்டும் நபி ஈஸா (அலை) வாக ஆகவே மாட்டார்.

4. ஹஜ்ரத் மஹ்தி (அலை) அவர்கள் கடைசி காலத்தில் வெளிப்படுவார் அவர் நாயகம் (ஸல்) அவர்களின் வம்சத்தைச் சேர்ந்தவர். பெயர் முஹம்மது. மிர்ஸா மொகல் பெயர் குலாம் அஹ்மது இருவருக்கும் சம்பந்தமே கிடையாது. ஆதலின் மிர்ஸா மஹ்தி (அலை) யுமல்ல.

5. முஜத்தித் மதத்திற்கு புத்துயிரளிக்கவேண்டும். அவர் கல்வியில் சிறந்தவரென்று அவர் காலத்தின் உலமாக்கள் போற்றி ஒப்புக்கொள்ள வேண்டும். மிர்ஸா புத்துயிரளிக்கவில்லை. அந்தகாரத்தைப்பரப்பினர் உலமாக்கள்

அவருக்கு உண்மையுணர்த்தினர்; நேர் வழி காட்டினர்; கடைசியில் குபிருடைய பத்வாவும் வரையப்பட்டது. ஆதலின், மிர்ஸா முஜத்திதிற்கும் யோக்கியதையுடையவரல்ல.

6. தஜ்ஜால் இக்காலத்திலில்லை. அவன் ஒருவனேயன்றி பலரன்று ஒற்றைக்கண்ணன் கடைசி காலத்தில் வெளிப்படுவான்.

7. யாஜூஜ் மாஜூஜ் இக்காலத்தில் நடமாடிக்கொண்டில்லை அடைபட்டிருக்கின்றனர். பிற்காலத்தில் வெளிப்படுவார்கள்.

சகோதரர்கள் மற்றொரு விஷயத்தையும் கவனிக்கவேண்டியதவசியம். ஒரே மனிதன், நபி, ஈஸா, மஹ்தி, முஜத்திதெவ்வாறுதல் முடியும். சொல்ப அறிவு படைத்த எவரேனும் இக்கூற்றை ஏற்றுக்கொள்வாரா? இஃதன்றி எமது சங்கைப்பெற்ற உலமாக்களின் பத்வாவின்படி மிர்ஸாயி கோஷ்டியினருடன் எவ்வித சம்பந்தமும் வைத்துக்கொள்ளக்கூடாதென்பதே.

## உஷார்.

எனதன்பார்ந்த முஸ்லிம் சகோதர, சகோதரிகாள்! காதியானிகளின் மாயவலையிலகப்பட்டு ஈமானைப் போக்கிக்கொள்ளாதீர்கள். காதியானிகள் பற்பலவிதமாய் சூழ்ச்சிகள் செய்து தமது நூதன பொய்மதத்தைப் பரத்த பகீரத முயற்சிகள் செய்துக் கொண்டிருக்கின்றனர்; தந்திரமான விஷயங்களைக் கூறி முஸ்லிம்களை ஏமாற்றப் பார்க்கின்றனர். எவரேனும் காதியானி மதத்தைத்தழுவுவார்களாயின், தக்ஷணமே காபிராய்ப் போவார்களென்பது திண்

ணம். எமது உலகரட்சகர் ரஸூலே முகர்ரம் (ஸல்) அவர்கள் 1300 வருடங்களுக்கு முன்னுடியே "கடைசி காலத்தில் பொய்யர்களான தஜ்ஜால்கள் கிளம்பி, நீங்களும், உங்கள் பிதாக்களும் கேள்விப்படாத (நூதன) விஷயங்களை க்கூறுவார்கள். (ஆதலின்) உங்களுக்கும், அவர்களுக்கும் எச்சரிக்கை செய்கிறேன்.............(ராவி ஹஜ்ரத் அபீஹுறைரா ரஸி) என்று எச்சரிக்கை செய்திருக்கின்றார்கள். அவ்வாறே இக்காலத்தில் பல தஜ்ஜால்களான பொய்யர்கள் கிளம்பி தம்மனம்போன படியெல்லாம் விஷயங்களைக்கூறி பொது மக்களை அந்தகாரத்திலாழ்த்த முயர்ச்சிக்கின்றனர். ஆதலின் எமது நபிகள் பெருமான் முஹம்மது முஸ்பாரஸூல் (ஸல்) அவர்கள் எச்சரிக்கை செய்துள்ளபடி, பொய்யர்களின் பசப்பான விஷயங்களை நம்பி ஈமானைப் போக்கிக்கொள்ளக்கூடாது. எமது நபிகள் பிரான் (ஸல்) அவர்கள் கூருத விஷயங்களெல்லாம் மிர்ஸா சாஹிபு கூறியுள்ளார். இவருக்கு எவ்வாறு தெரிந்தது? அவ்வாறு தெரியவேண்டிய காரணமென்ன? இஃதெல்லாம், ஜனங்களை தன்வசப்படுத்தி, தான் கீர்த்திவாய்ந்தவராக விளங்க வேண்டுமென்றேயாகும். மிர்ஸா எம்பெருமானர் (ஸல்) அவர்களைக் கொண்டு பொறுமைக் கொண்டவராயிருந்தார், இதற்கு அவரின் நூல்களே சாட்சியாயிருக்கின்றன. இறைவன் எமது நபிகள் நாயகம் ஹபீபேரப்பில் ஆலமீன் (ஸல்) அவர்களை நோக்கி "தங்களைப் படைத்திராவிடில், வானம், பூமி முதலியவைகளைப் படைத்திருக்கமாட்டேன்" என்றும், "தங்களை உலகோர்க்காக ரஹ்மத்தாக அனுப்பினேன்" என ப்பலவாருய்ப் புகழ்ந்து கூறியுள்ளான். இவ்வளவு மென்மையும் சிறப்பும் வாய்ந்த எமது, ஈருலக அதிபர் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களுககு இறைவன் தெரிவிக்காத இரகசி

யத்தை கேவலம்! இந்த காதியானியில் தோன்றிய மிர்ஸா வுக்கு மட்டும் வெளியாக்கி விட்டானும்! "கேவூரில் நெய் வடிகின்ற தென்றல் கேட்பவர்க்கு புத்தியில்லையோ? "பூனை தன் கண்ணை மூடிக்கொண்டால் உலகமே இருளடைந்து விடுமோ? முஸைலமதுல்கஸ்ஸாபு முதலியவர்கள் நபித்துவத்தின் தாவாச்செய்தார்ள். அவர்கள் தம் தாவாவில் காரியசித்தியடைந்தார்களா? இல்லை. ஆனால், அதி சீக்கிரம் இவ்வுலகைத் துறந்தார்கள். இன்னும் எத்தனை பொய்யர்களான வழி கேடர்கள் தோன்றிய போதிலும் பரிசுத்த இஸ்லாத்தின் முன் நிலைத்து நிற்க முடியாது' முஸ்லிம்கள் எச்சரிக்கையாயிருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். ஈமானென்னும் மாப்பெருஞ்ஜோதியை இக்காலத்தில் ஒவ்வொருவரும் காப்பாற்ற வேண்டியது அத்யாவசியமாகும். ஈமான் போய்விடுமாயின் அந்தோ! என்றென்றைக்கும் நரகவேதனையையே யடைய நேரிடும். எமது உலகரட்சகரின் கட்டளைகளின்படியும், குர்ஆனின் கட்டளைகளின்படியும் நடந்து வரவேண்டியதே ஒவ்வொரு உண்மை முஸ்லிமின் முதற்கடமையாகும். "என் உம்மத்தில் குழப்பம் உண்டாயிருக்கும் போது, எவன் எனது ஸுன்னத்தை (வழி) பற்றிப் பிடித்துக் கொள்கிறானோ, அவனுக்கு நூறு ஷஹீதுகளின் பதவி கிடைக்கும்" (ராவிஜாபிர் ரஸி) என்று நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார்கள் ஆதலின், இக்காலத்தில் நாம் ஸுன்னத்தே ரஸுலைப்பின்பற்றி நடந்து வருவதே சாலச்சிறந்ததாகும். இஃதே ஈடேற்றத்திற்குரிய வழியாகும் "(நபியே) சொல்வீராக! நீங்கள் அல்லாஹ்வின் மீது பிறியம் வைப்பவர்களாயிருப்பீர்களாயின், என்னைப்பின் பற்றுங்கள், அல்லாஹ் உங்கள் மீது பிறியம் வைப்பான்" குர்ஆன்.) எம்பெருமா

னூர் (ஸல்) அவர்களைப்பின்பற்றுவதெவ்வாறு? காதியானிகள் நாயகம் (ஸல்) அவர்களைப்பின்பற்றி நடந்து வருவதாக சொல்லிக்கொண்டு மிர்ஸாவை நபியென்றும் ஈஸா, மஹ்தி, முஜத்திதுயெனப்பலவாறுங்கூறுகின்றனரே யவ்வாறு? அவ்வாறு பின்பற்றுவது அணுவளவும்பிரயோஜனப்படாது குர்ஆன், ஹதீஸ், இவைகளின்படிமன மாரப்பின்பற்றி நடந்து வருவதே சரியான ஈமானுகும். இஃதே ஈருலகிலும் ஜெயசீலர்களாக விளங்குவதற்குரிய வழியாகும்.

## மிர்ஸாயிகளுக்கோர் வார்த்தை

மிர்ஸாயிகளே! உங்கள் குருவின் கொள்கைகளைப்பின்பற்றி மோசம்போகாதீர்கள். மிர்ஸாவைப்பின்பற்றி வருவீர்களாயின் இம்மை, மறுமையிரண்டிலும் நஷ்டவாளிகளாகவேயிருப்பீர்கள். மிர்ஸாவின் போதனைகளோ குர்ஆன், ஹதீஸுகளுக்கு முற்றும் விரோதமானவைகளாயிருக்கின்றன. நியாயபுத்தியைக்கொண்டு நீங்களே சற்று கவனித்துப்பாருங்கள். மிர்ஸாவின், அந்தகாரக்கொள்கைகளையே பின்பற்றியொழுகிவருவீர்களாயின், சந்தேகமின்றி மறுஉலகில் நஷ்டவாளிகளாய்ப் பரிதவிப்பீர்கள். உங்கள் குருவின் கொள்கைகளைப்பரத்துவதற்காக பகீரத முயர்ச்சிகள் செய்து வருவதை அடியோடு விட்டு நேரான வழியில் சீராகநடந்து ஜெயசீலர்களாக விளங்க முயற்சிசெய்யுங்கள். குர் ஆன், ஹதீஸுகள் பூரண வழி காட்டிகளாயிருக்கின்றன. இவ்விரண்டைப்பின்பற்றி நடந்துவரவேண்டியது சாலச்சிறந்ததாகும். இவையிரண்டிற்கும் விரோதமாய் நடப்பவர் நரகவாதிகளேயாகும். நீங்கள் எமது நபிகள் பிரான் முஹம்மது (ஸல்) அவர்களின் உம்மத்துகள் தானென்று பறைசாற்றுகின்றீர்கள். இத்துடன் மிர்

ஸானவ நபி, ஈஸா, மஹ்தி, முஜத்திதென்று கூறுகின்றீர்கள். இவ்வாறு கூறும் நீங்கள், நாயகம் (ஸல்) அவர்களின் உம்மத்துகளாக எவ்வாறாதல் முடியும். ஒருக்காலும் முடியாது. சாக்கு போக்கு சொல்வதால் எவ்வித பிரயோஜனமும் கிடையாது. உண்மையில் நீங்கள் எமது நபிகள் பிரான் (ஸல்) அவர்களின் சிறந்த உம்மத்துகளாகவேயிருக்கவேண்டுமென்ற நல்லெண்ணமிருக்குமாயின், அம்மாசற்ற உலகரட்சகர் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களின் கட்டளைகளுக்கு முற்றும் தலை சாய்த்து பின்பற்றி வருவதே அவர்களின் உம்மத்துகளென்பதற்கு அடையாளமாகும். உண்மையை எடுத்துக்கூறுவதே எமது கடமையாகும். அவற்றை ஏற்றுக்கொண்டு நடந்துவருவதே மிகவும் நலமாகும். நமது கொள்கையை நாம் விடமாட்டோம். அதன்படியே நடந்து வருவோமென்று பிடிவாதம் செற்வீர்களானால், அது உங்களிஷ்டம். "உங்களுக்கு, உங்களின் மார்க்கம் எங்களுக்கு எங்களின் மார்க்கம்" (குர் ஆன்) என்ற ஆயத்தைக் கூறுவதைத்தவிரவேறொன்றும் சொல்லப்போவதில்லை. மாஅலைனா-இல்லல் பலாக்.

## துஆ

இறைவா? உனது கிருபா கடாக்ஷத்தால், உனது அடியார்களும், உனது ஹபீபாகிய ஸர்வரேகாயினாத் காத்தமன் நபிய்யீன் ஹஜ்ரத் முஹம்மது முஸ்தபா ரஸூல் (ஸல்) அவர்களின் உம்மத்துகளுமான முஸ்லிம்களை வழிகேடர்களான தஜ்ஜால்களின் மாயவலையிலகப்பட்டு ஈமானைப்போக்கி விடாமலிருக்கும்படியாய் காத்தருள் புரிவாயாக ஸலவாத்தும், ஸலாமும், ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களின் கிளையார்கள், தோழர்கள் மீதும் உண்டாவதாக. ஆமீன் வல்ஹம்துலில்லாஹிரப்பில் ஆலமீன்.

முற்றிற்று.